# பாட்டாளி சிந்தனை

Volume 28 No. 8

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்)

SUCI (Communist)

April 2018

தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டியின் மாத இதழ்

விலை ரூ 5




## வரலாற்றுச் சிறப்புமிக்க ஏப்ரல் 24 நீடூழி வாழ்க!

"...பாசிசமென்பது ஆன்மீகவாதத்துடனான விஞ்ஞானத்தின் ஒரு விநோதமான கலவையாகும். இது பாசிச அரசின் பொருளாதார மற்றும் இராணுவபலத்தை வளர்த்து வலுப்படுத்தும் முயற்சியில் விஞ்ஞானத்தின் தொழில்நுட்ப அம்சங்களை எடுத்துக் கொள்கிறது. அதே வேளையில், ஒழுக்கம், நீதிநெறித் துறைகளில், தேசிய கலாச்சாரம் மற்றும் பாரம்பரியம் என்ற பெயரில் அனைத்து விதமான விஞ்ஞானத்திற்கு புறம்பான மதவாத கருத்துக்களை மக்கள் மனதில் பதிக்கிறது. இதன் மூலம் மக்களுடைய சிந்தனை போக்கை காரண காரியங்களை ஆராயும் விஞ்ஞானபூர்வ பாதையிலிருந்து விலக்கி குருட்டு நம்பிக்கை, முன்கூட்டியே தீர்மானித்தல் மற்றும் பழமைவாதம் எனும் மாய பாதைக்கு தள்ளுகிறது. இறுதியாக இது சமூக செயல்பாட்டின் மீது வெறுப்பை வளர்க்கிறது ..."

**சிப்தாஸ் கோஷ்**

*(சிப்தாஸ் கோஷ் தேர்வு நூல் 4, பக்கம் 216)*

### மத்திய பட்ஜெட் 2018–19

# பொருளாதார கொள்கை அறிக்கையல்ல; வாக்கு சேகரிக்கும் முயற்சி

நாம் அறிந்த வரையில் பட்ஜெட் என்பது நாட்டு மக்கள் சந்தித்துவரும் பொருளாதார பிரச்சினைகளை எதிர்கொண்டு தீர்ப்பதற்காக, அல்லது குறைந்தபட்சம் சுமைகளைக் குறைப்பதற்காகவேனும் பயன்படுத்தப்படும் சாதனம் ஆகும். ஒவ்வோராண்டும் பட்ஜெட் தாக்கல் செய்யப்படும்போது சற்றேனும் சுமையை குறைப்பதற்கான நடவடிக்கைகள் அறிவிக்கப்படாதா என்ற ஏக்கத்தோடு மக்கள் எதிர்பார்த்திருப்பர். தொடர்ந்து உயர்ந்துவரும் விலைவாசி, அதிகரித்துவரும் வேலையின்மை, இருக்கின்ற வேலைகூட இல்லாமல் போய்க்கொண்டிருக்கும் நிலை, தொடர்ந்து வீழ்ந்து வரும் வருமானம், வரிஉயர்வால், குறிப்பாக மறைமுகவரிகள் உயர்வால் அதிகரிக்கும் சுமைகள், வங்கி சேமிப்புகள் மற்றும் தேசிய சேமிப்பு பத்திர சேமிப்புகளின் வட்டி விகிதம் குறைப்பு போன்ற பிரச்சினைகளால் நாட்டு மக்கள் ஏற்கனவே மென்னி இறுக மூச்சுத்திணறிக் கொண்டிருக்கிறார்கள். இவற்றின் விளைவாக கோடானுகோடி உழைக்கும் மக்களின் துன்பதுயரங்கள் எல்லை மீறி சென்றுகொண்டிருக்கின்றன. இந்நிலையில் கடந்த பல ஆண்டுகளாகவே பட்ஜெட் என்பது உழைக்கும் மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு ஏமாற்றமளிப்பதாகவே திகழ்ந்து வெற்று வாக்குறுதிகளைத் தருவனவாக சீரழிந்துவிட்டன. எந்த கட்சி ஆட்சியிலிருந்தாலும் இதே கதைதான். பட்ஜெட் ஆவணங்கள் உண்மை விவரங்களை மறைத்தும் திரித்தும் கூறுகின்ற ஆவணமாகவும் வெற்று வாக்குறுதிகள், கானல் நீரொத்த எதிர்பார்ப்புகள் ஆகியன நிறைந்தனவாகவும் விளங்குகின்றன. ஈவிரக்கமின்றி சுரண்டுகின்ற ஆளும் ஏகபோகங்களின் வர்க்கத் தேவைகளை பூர்த்தி செய்வனவாக இருந்தபோதிலும் மக்கள் சார்பு பட்ஜெட் என்றும் ஏழைகளுக்கு ஆதரவானவை என்றும் நயவஞ்சகமாக முன்னிறுத்தப்படுகின்றன.

ஆனால் இவை அனைத்திற்கும் சிகரம் வைத்தாற்போல், கடந்த மாதம் மத்திய நிதி அமைச்சர் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்த 2018ம் ஆண்டிற்கான பட்ஜெட்டானது அடுத்த ஆண்டு நடத்தப்பட வேண்டிய பாராளுமன்றத் தேர்தலுக்கான பாஜகவின் தேர்தல் அறிக்கை போலவே உள்ளது. பட்ஜெட் ஆவணமும் அதை மத்திய நிதி அமைச்சர் முன்வைத்ததும் அதைத் தொடர்ந்து பிரதமர் நடத்திய ஊடக சந்திப்பும் ஆளுங்கட்சி தனது தேர்தல் பிரச்சாரத்தை துவக்கிவிட்டது போல் தெரிகிறது. "தேர்தல் தேதியைக் குறிப்பிடுவது மட்டும்தான் பாக்கி, மற்ற எல்லாமே அருண் ஜேட்லி சொல்லிவிட்டார் என பாஜக மத்திய அமைச்சர் ஒருவரே கருத்து தெரிவித்திருக்கிறார். பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்ட பிறகு செய்தியாளர்களை சந்தித்த பிரதமர் மோடி, "விவசாயத்திலும் உட்கட்டமைப்பிலும் தனது கவனத்தைச் செலுத்துகின்ற இந்த பட்ஜெட் 'புதிய இந்தியா'வின் அடிக்கல்லை பலப்படுத்துகிறது. ஏழை நடுத்தர மக்களுக்கான சுகாதாரத் திட்டங்கள் போன்ற அம்சங்களை இந்த பட்ஜெட் முன்வைப்பதோடு சிறு தொழில் முனைவோரின் செல்வத்தை அதிகரிப்பதற்கான திட்டங்களைக் கொண்டுள்ளது" என்று ஏதோ தேர்தல் பிரச்சாரத்தில் உரையாற்றுவது போல பேசினார். அவர் கூறியதில் எந்த அளவிற்கு உண்மை இருக்கிறது?

### விவசாயத்தில் செலுத்தும் கவனமும் 2022ம் ஆண்டுக்குள் விவசாயிகள் வருமானத்தை இரட்டிப்பாக்குவோம் என்ற வாக்குறுதியும்

இந்த பட்ஜெட்டில் முக்கியத்துவம் கொடுப்பதாக சொல்லப்படும் துறைகள் வேளாண்மை, மருத்துவம், 'சுக வாழ்வு' ஆகியனவாகும். இவற்றை வரிசையாகப் பார்ப்போம். நிதி அமைச்சர், பிரதமர் ஆகிய இருவருமே இந்த பட்ஜெட்டை விவசாயிகள் ஆதரவு பட்ஜெட் என்று சொல்லிக்கொள்கின்றனர். முதலாவதாக, விளைபொருட்களுக்கான உற்பத்தி செலவைக் காட்டிலும் 50% அதிகமாக குறைந்தபட்ச ஆதரவு விலையை உயர்த்துவதாக இந்த பட்ஜெட் கூறுகிறது. விவசாயத்திற்கான 2006ம் ஆண்டு சுவாமி நாதன் கமிஷன் அறிக்கையை அமல்படுத்துவதாக இந்த பட்ஜெட் அறிவிப்பு பேசுகிறது. ஆனால், உண்மையில் இந்த கமிஷனின் பரிந்துரைகளுக்கு மாறாக அதனை திரித்துக்கூறி பொய்ப்பிரச்சாரம் செய்யப்படுகிறது.

"கணக்கிடப்பட்ட சராசரி உற்பத்தி செலவைவிட குறைந்தது 50% அதிகமாக" பயிர்களுக்கான குறைந்த பட்ச ஆதரவு விலையை நிர்ணயிக்கவேண்டும் என சுவாமிநாதன் கமிஷன் பரிந்துரைத்துள்ளது. உற்பத்தி செலவைக் கணக்கிடும் முறையைப் பார்ப்போம். இந்த செலவுக் கணக்கில் இரண்டு அளவீடுகள் உள்ளன. டெக்னிகல் மொழியில் A2 + FL என அழைக்கப்படும் முதலாவது அளவீட்டில் விதை, உரம், கூலிக்கு அமர்த்தப்பட்ட தொழிலாளர்கள், எரிபொருள், பாசனம், பூச்சிக்

தொடர்ச்சி 2ம் பக்கம்

## ஏப்ரல் 24

## எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் 70வது ஸ்தாபக தினம் பொதுக்கூட்டம்

27.04.2018 வெள்ளிக்கிழமை
மாலை 6 மணி

தானா தெரு
புரசைவாக்கம், சென்னை

தலைமை: தோழர் **A ரெங்கசாமி,** தமிழ்நாடு மாநிலச் செயலாளர்

சிறப்புரை: தோழர் **K ராதாகிருஷ்ணா,** மத்தியக் கமிட்டி உறுப்பினர்

*அனைவரும் வருக!*

# மத்திய பட்ஜெட் 2018–19

# விவசாயத்தை ஊக்குவிக்கிறோம் எனும் பெயரில் கொண்டுவரப்படும் கொள்கைகள் யாவும் விவசாயி விரோதக் கொள்கைகளே

1ம் பக்கத் தொடர்ச்சி

கொல்லி போன்றவற்றுக்காக விவசாயி பணமாகவோ பொருளாகவோ செலவிட்ட தொகை மட்டுமின்றி, மிக முக்கியமாக இந்த உற்பத்தியில் ஈடுபட்டதனது உழைப்பிற்காகவும் தனது குடும்பத்தாரின் உழைப்பிற்காகவும் கொடுக்கப்படாத கூலித்தொகையையும் சேர்த்து கணக்கிடப்படும். உற்பத்தி செலவுக் கணக்கீட்டில் இரண்டாவது அளவீடு C2 எனப்படும் ஒட்டுமொத்த செலவுக்கணக்காகும். இதில் முதலாவது அளவீடான A2 + FL லோடு நில வாடகையாக கணக்கிடப்பட்ட மதிப்பு, நிரந்தர மற்றும் ஒர்க்கிங் மூலதனம், அதன் மீதான வட்டி ஆகியனவும் இன்னபிறவும் அடங்கும். இந்த மதிப்பீட்டை விட்டுவிட்டு வெறும் A2 + FL மதிப்பீட்டின்படி கணக்கிடப்பட்ட தொகையைக் காட்டிலும் **50%** அதிகமாக குறைந்தபட்ச ஆதார விலையை வழங்கப்போவதாக பட்ஜெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கேதான் கபடத்தனம் இருக்கிறது. ஏனெனில், குஆவிலை A2 + FL ஐக்காட்டிலும் ஏற்கனவே **40%** அதிகமாக உள்ளது. ஆக, இந்த பட்ஜெட்டால் விவசாயிகளுக்குக் கிடைக்கப்போவது வெறும் **10%** மட்டுமே. தவிர, இந்த **50%** அதிகமான விலை என்பது அறிவிக்கப்படாத பயிர்களுக்கு என்று டாக்டர் சுவாமிநாதன் அவர்களே தொலைக்காட்சி நேர்காணல் ஒன்றில் குறிப்பிட்டார். ஆகையால், உண்மை யாதெனில், பெருவாரியான விவசாயிகள் உற்பத்தி செய்யும் அறிவிக்கப்பட்ட பயிர்களான நெல், கம்பு, கேழ்வரகு, சோளம், இன்னபிற பயிர்களை இந்த அறிவிப்பின் பலன்களிலிருந்து விலக்கி வைத்துவிட்டது. கோடைகாலப் பயிர்களுக்கு உற்பத்தி செலவைவிட **50%** அதிகமாக குறைந்தபட்ச ஆதார விலையை உயர்த்தி வழங்கியதன் மூலம் தனது தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றிவிட்டதாக நிதியமைச்சர் அறிவிப்பது பச்சைப் பொய்யாகும். யதார்த்தத்தில் உயர்த்தப்பட்டிருப்பது **3%** முதல் **38%** வரை மட்டுமேயன்றி **50%** அல்ல.

அடுத்து வருவது கொள்முதல் பொறியமைவை சீர்படுத்துதல் என்ற மிக முக்கியமான பிரச்சினையாகும். இ–மார்க்கெட்டிங், ஆன்லைனில் விலை விவரம் தெரிந்துகொள்ளும் வசதி, விவசாய விளைபொருட்களுக்கான மார்க்கெட்டிங் கமிட்டிகளை முடுக்கிவிடுதல், இத்யாதி இத்யாதி என பலவாறு பகட்டாக பேசினாலும் உண்மையில் விவசாயிகளிடமிருந்து விளைபொருட்கள் கொள்முதல் செய்யப்படுவதானது பெரும் பன்னாட்டு நிறுவனங்கள், ஊழல் மலிந்த நிர்வாகம், இடைத்தரகர்கள், ஆளுங்கட்சித் தலைவர்கள், பஞ்சாயத்து தலைவர்கள் போன்றோர் அடங்கிய சதிகார கூட்டணியால் ஆதிக்கம் செலுத்தப்படுகிறது. கிராம பொருளாதாரத்தோடு பரிச்சயமுடைய யாருக்கும் இது நன்றாகத் தெரியும்.

இந்த சதிகார கூட்டணி கொள்முதலில் குறுக்கீடு செய்து தில்லுமுல்லுகள் செய்து இறுதியில் வந்த விலைக்கு விற்கும் நிலைக்கு விவசாயிகளைத் தள்ளிவிடுகிறார்கள். விவசாய இடுபொருட்களை அதிக விலை கொடுத்து வாங்குகின்ற விவசாயிகள் விளைபொருட்களையோ ஆதாயமான விலையில் விற்க முடியாததால் வாங்கிய கடனை கட்டுவதற்கு இயலாதவர் ஆகிவிடுகின்றனர். கடன் சுமையாலும் பசி, பட்டினியை பொறுத்துக்கொள்ள இயலாமலும் பல விவசாயிகள் குடும்பத்துடன் தற்கொலை செய்துகொள்கின்றனர். கடந்த **3** ஆண்டுகால பாஜக ஆட்சியில் விவசாயிகள் தற்கொலை **26%** அதிகரித்திருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. பெரிதாக பேசப்படும் பயிர்க்காப்பீடு (FASAL BIMA) ஒரு பெரிய ஏமாற்று கோஷமாகும். ஏனெனில், பெருவாரியான விவசாயிகள் அத்திட்டப்படி காப்பீடு தொகை பெற தகுதியற்றவர்களாக ஆகிவிடுகின்றனர். இந்தப் பிரச்சினைகளைப் பற்றியெல்லாம் நிதியமைச்சரோ பிரதமரோ தங்களது சுய தம்பட்டம் அடித்துக்கொள்கின்ற உரையில் எதுவுமே சொல்லவில்லை. மாறாக, ஆளும் வர்க்கத்திற்கு சேவை செய்யும் ஆட்சியாளர்கள் எது செய்தாலும் கைதட்டி ஊக்கப்படுத்துகின்ற பொருளாதார நிபுணர்களோ, சந்தை நிபுணர்களோ விவசாயிகளுக்கு குறைந்தபட்ச ஆதார விலையை வாரி வழங்குவதால் இது விவசாய உற்பத்தியை அதிகரிக்கும் என்றும் இதனால் விவசாயிகள் கைகளில் அதிக பணம் புழங்கும் என்றும், கிராமப்புற நுகர்வு அதிகரித்து கிராமப்புற டிமாண்ட் அதிகரிக்கும் என்றும் உற்சாகக் கூப்பாடு போடுகிறார்கள். யாரை ஏமாற்றுவதற்கு இந்த ஆர்ப்பரிப்புகள்?

இவற்றுக்கு சற்றும் குறைவில்லாத மற்றொரு ஏமாற்றுத்தனமானது **2022**ம் ஆண்டிற்குள் விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்கிவிடுவோம் என்ற வெற்று வாக்குறுதியாகும். பெரும்பாலான விவசாய குடும்பங்கள் **2015–16**ம் ஆண்டில் மாதம் ஒன்றுக்கு ரூ**1600** வருமானம் ஈட்டி வந்ததாக ஒரு கணக்கெடுப்பு கூறுகிறது. பட்ஜெட்டுக்கு முன்பு வெளியிடப்பட்ட பொருளாதார சர்வேயானது கடந்த நான்காண்டுகளாக விவசாய வளர்ச்சி தேக்க நிலையில் இருந்ததாகவும் வரும் சில ஆண்டுகளில் பருவநிலை மாற்றம் காரணமாக விவசாய உற்பத்தி **25%** வீழ்ச்சியடையும் என்றும் தெரிவித்துள்ளது. நிலைமை இவ்வாறெனில், இயற்கைப் பேரிடர்களால் ஏற்படும் பிரச்சினைகளை எதிர்கொண்டு வெற்றிபெறுவதற்கு என்ன பருண்மையான திட்டங்கள் இருக்கின்றன என்ற கேள்வியை எழுப்பவேண்டியதாகிறது. ஒன்றன்பின் ஒன்றாக பல செயற்கைக் கோள்களை விண்ணில் ஏவி, அதி நவீன ரக ஏவுகணைகளையும் அணு ஆயுதங்கள் உட்பட பல அதி நவீன இராணுவ தளவாடங்களையும் தயாரிக்கும் அளவிற்கு அறிவியல் தொழில்நுட்பத்தில் நாடு வளர்ச்சி கண்டுள்ளதாக பீற்றிக்கொள்ளும் அரசாங்கம் மழைக்காலத்தில் உபரி நீரைத் தேக்கி வைத்து வறட்சியின்போது அவற்றை முறையாக பயன்படுத்தி பாசன வசதி செய்வதற்கான தொழில்நுட்பம் இன்றி பரிதவிக்கிறது என்று நம்ப முடியுமா? கடந்த நான்காண்டுகளில் வேளாண் உற்பத்தியில் சராசரியான ஜிவிஏ (இது ஒரு புதிய அளவீடாகும். ஒட்டுமொத்த வேளாண் உற்பத்தியிலிருந்து இடைநிலை நுகர்வை கழித்தபின் கிடைக்கின்ற உற்பத்தி அளவை இது குறிக்கும்) வெறும் **1.9%** மட்டுமே ஆகும். விவசாயிகளின் வருமானத்தை **2022**ம் ஆண்டிற்குள் இரட்டிப்பாக்குவதற்கு இந்த ஜிவிஏ குறைந்தது ஆண்டுக்கு **12%**மாக இருக்க வேண்டும். இது யதார்த்த நிலையை மூடி மறைக்கின்ற வெற்று வாக்குறுதியேயன்றி வேறல்ல.

சாலைகள், புதிய வீடுகள், கழிவறைகள் கட்டுதல் புதிய மின் இணைப்புகள் வழங்குதல் போன்ற கிராமப்புற உட்கட்டமைப்பு வசதிகளின் மேம்பாட்டிற்காக ரூ**14.34** லட்சம் கோடி செலவிட தீர்மானிக்கப்பட்டிருப்பதாக இந்த பட்ஜெட் தெரிவிக்கிறது. ஆனால், இந்த செலவினத்தின் பெருவாரி பகுதி பட்ஜெட் அல்லாத நிதி ஆதாரங்களிலிருந்து பெறப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பட்ஜெட் அல்லாத நிதி ஆதாரங்கள் எவை என்பது தெளிவாக இல்லை. கிராமப்புற பொருளாதாரத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற அரசாங்கமானது கிராமப்புற உழைக்கும் மக்களுடைய பாரத்தை குறைப்பதற்கும் கிராமப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டில் அரசு முதலீட்டை அதிகரிப்பதற்கும் உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டும். ஆனால் ஊரக மேம்பாட்டு அமைச்சகத்திற்கான ஒதுக்கீடு வெறும் **4%** மட்டுமே அதிகரிக்கப்பட்டுள்ளது. மொத்த பட்ஜெட்டில் ஊரக மேம்பாட்டுக்கான பட்ஜெட் ஒதுக்கீடு வெறும் **2.36%** மட்டுமேயாகும். இது கடந்த ஆண்டைக்காட்டிலும் குறைவானதாகும். நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கிராமப்புற மேம்பாட்டிற்கான நிதி ஒதுக்கீடு கடந்த ஆண்டு அளவான **1.5%**லிருந்து இவ்வாண்டு **1.08%**மாக குறைக்கப்பட்டுள்ளது. கிராமப்புற பொருளாதாரத்திற்கு அரசாங்கம் கொடுக்கும் முக்கியத்துவத்தின் லட்சணத்தைப் பாருங்கள்! நிறுவனங்கள் மூலம் வேளாண் துறைக்கு வழங்கப்படும் கடன் தொகையின் அளவை அதிகரித்து அதை ரூ**11** லட்சம் கோடி என்ற அளவிற்கு உயர்த்தப்போவதாகவும் தம்பட்டம் அடிக்கப்படுகிறது. ஆனால், இது வங்கிகள் மற்றும் இதர நிதி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள கட்டளையேயன்றி பட்ஜெட் நிதி ஒதுக்கீடு சம்பந்தமான விஷயமல்ல. மீன்பிடித் தொழிலுக்கும் கால்நடை பராமரிப்பிற்கும் கடன் வழங்கப்படும் என்று பட்ஜெட்டில் உறுதியளிக்கப்பட்டுள்ளது. ஆனால், இதற்கான நிதி ஒதுக்கீடு ஏதும் செய்யப்படவில்லை. நபார்டு (NABARD) போன்ற நிதி நிறுவனங்கள் பங்குச்சந்தையிலிருந்து நிதி தருவித்து இவற்றுக்கான கடன் அளிக்கும். ஆனாலும் இது பட்ஜெட் அறிவிப்பில் இடம்பெற்றுள்ளது!

மற்றொரு மிக முக்கியமான விஷயம்: நிதி நிறுவனங்கள் வழங்கும் கடன்கள் மிக அபூர்வமாகத்தான் ஏழை, சிறு விவசாயிகளை சென்றடைகிறது. இவை பெரும்பாலும் பெரு விவசாயிகள் மற்றும் கிராமப்புற முதலாளிகளால் வசப்படுத்தப்படுகின்றன. மிகவும் உணர்ச்சி பூர்வமாக அரசாங்கம் உச்சரிக்கும் 'விவசாயி' என்ற வார்த்தை பணக்கார விவசாயிகளையே குறிக்கிறது. எனவே, "விவசாயிகளின் நலன்கள்" என்று அரசாங்கம் கூறும்போது அது ஏழை, சிறு விவசாயிகளின் நலனை குறிக்கவில்லை. கிராமப்புற பணக்கார விவசாயிகளாலும் பன்னாட்டு நிறுவனங்களாலும் நடத்தப்படும் பெரும் வேளாண் நிறுவனங்கள் ஆகியோரை செல்வச் செழிப்பு மிக்கவர்களாக்கி அவர்களை மேம்படுத்துவதுகூட விவசாயிகளின் வருமானத்தை உயர்த்துதல் என்ற கணக்கில் சேர்க்கப்படக்கூடும். மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்திற்கு ரூ**55,000** கோடி மட்டுமே நிதி ஒதுக்கியிருப்பதிலிருந்து கிராமப்புற ஏழைகள் மீது இந்த அரசாங்கத்திற்கு இருக்கின்ற அக்கறை அம்பலமாகிறது. அதிலும், **2017–18**ம் ஆண்டிற்கு இத்திட்டத்தின் கீழ் மாநில அரசாங்கங்களுக்கு தரவேண்டிய ரூ**4800** கோடியைக் கழித்தால் இவ்வாண்டுக்கான நிகர நிதி ஒதுக்கீடு மேலும் குறையும்.

அப்படியிருந்தும் ஏழைகள் சார்பு, விவசாயிகள் நலன்காக்கும் பட்ஜெட்டை தாக்கல் செய்திருப்பதாக பிரதமர் அடிக்கும் தம்பட்டம் வெறும் வெற்றுக் கூச்சல் அல்ல என நாம் நம்பவேண்டுமாம்!

"விவசாயத்தில் அறுவடைக்குப் பிறகு மதிப்புக் கூட்டுவதில் தொழில்முறை நிபுணத்துவத்தை ஊக்கப்படுத்துவதற்காக, 'விவசாயி உற்பத்தியாளர் கம்பெனிகளுக்கு' **2018–19**ம் நிதியாண்டிலிருந்து ஐந்தாண்டு காலத்திற்கு கிடைக்கின்ற லாபத்திலிருந்து **100** சதவிகித வரி விலக்கு அளிக்கப்படுவதாகவும் இந்த பட்ஜெட் கூறுகிறது. இந்த அறிவிப்பும் கேள்விக்குரியது. ஏனெனில், 'விவசாயி உற்பத்தியாளர் கம்பெனிகள்' எனப்படும் இக்கம்பெனிகள் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தனியார் லிமிடெட் கம்பெனிகளின் கலப்பில் தோன்றியவை எனச் சொல்லப்பட்டாலும் உண்மையில் இவை தனியார் உடைமையின் கீழ் கிராமப்புற பணக்கார நிலஉடைமை பெருந்தனக்காரர்களால் கட்டுப்படுத்தப்படும் நிறுவனங்களாகவே யதார்த்தத்தில் இருக்கின்றன. இக்கம்பெனிகள் மூலமாக மறைமுகமாக பன்னாட்டு நிறுவனங்கள்கூட நுழைவதாக செய்திகள் வருகின்றன. இச்சூழ்நிலையில், வரி விலக்கு அளிப்பதென்பது வெண்ணையை திரட்டி பன்னாட்டு கம்பெனிகளுக்கும் கிராமப்புற பணக்காரர்களுக்கும் கொடுப்பதாகவே அமையும். ஏழை, சிறு விவசாயிகளுக்கு இதன் பலன்கள் கிடைக்காது. மற்றொரு விஷயத்தையும் நாம் இங்கே தெளிவுபட சொல்லியாகவேண்டும். ஒரு முதலாளித்துவ அமைப்பு முறையில் கூட்டுறவு அமைப்புகள் கூட பிரதானமாக முதலாளித்துவ விதிகளாலேயே வழிநடத்தப்படும். மரணத்தருவாயில் உள்ள முதலாளித்துவத்தில் கூட்டுறவு அமைப்புகள்கூட ஏழை விவசாயிகளின் நலன்களுக்கு ஏற்ற வகையில் செயல்படாது என்பது திண்ணம்.

## உலகின் ஆகப்பெரும் மருத்துவ கவனிப்பு திட்டம் அறிமுகப்படுத்துதல் என்ற ஏமாற்றுத்தனம்

நிதியமைச்சரின் பட்ஜெட் உரையில் பிரதானமாக இரண்டு திட்டங்கள் குறிப்பிடப்படுகின்றன. "மக்களுடைய வீடுகளுக்கு அருகாமையில் மருத்துவ கவனிப்பு முறையை கொண்டுவருகின்ற" சுகாதார மற்றும் நலவாழ்வு மையங்கள் என்பது ஒன்று. மற்றொன்று இடைநிலை மற்றும் கடைநிலை கவனிப்பு உள்நோயாளி சிகிச்சைக்காக ஒரு குடும்பத்திற்கு ஒரு ஆண்டிற்கு ஐந்து லட்சம் ரூபாய் வரையில் **10** கோடிக்கும் அதிகமான (சுமார் **50** கோடி பயனாளிகள்) ஏழை மற்றும் நலிவுற்ற குடும்பங்களுக்கு மருத்துவச் செலவினம் மேற்கொள்கின்ற முதன்மையான தேசிய சுகாதார பாதுகாப்புத் திட்டம்" ஆகும். இதனை "உலகிலேயே அரசாங்க நிதியில் செயல்படுத்தப்படும் ஆகப்பெரும் மருத்துவ கவனிப்பு திட்டம்" என்று நிதியமைச்சர் பெருமையாகக் கூறினார். அது முதற்கொண்டு ஊடகங்களும்

தொடர்ச்சி 7ம் பக்கம்

# நீரவ் மோடியும் பஞ்சாப் நேஷனல் வங்கி மோசடியும்

மறைந்துகிடந்த இன்னுமொரு மர்மம் வெளிப் பட்டிருக்கிறது. இந்த முறை, சட்ட விதிமுறைகளை மீறி, பெரும் தொழிலதிபர்களும் வணிக முதலை களும் எவ்வாறு வங்கிப்பணத்தை சூறையாடுகின் றனர் என்பதற்கான அப்பட்டமான ஒரு வெளிப் பாடாக வந்திருக்கிறது. சில ஆண்டுகளுக்கு முன்பு, **1992**இல் நடந்த ஒன்றை நினைவுபடுத்திப் பார்க் கலாம். ஹர்ஷத் மேத்தா என்ற மும்பையைச் சேர்ந்த தரகர் ஒருவர் வங்கி அமைப்பினுள் இருக்கும் ஓட்டைகளை கில்லாடித்தனமாகப் பயன்படுத்தி, யூகப் பங்குச்சந்தையை செயற்கையாகத் தூண்டி விட்டு, அபரிமிதமான செல்வத்தைக் குவித்திட வங்கி நிதியைப் பயன்படுத்தி மோசடி செய்தார்.

**2017**இல் ஃபோர்ப்ஸ்–இன் இந்திய கோடீஸ் வரர்கள் பட்டியலில் **57**ஆவது இடத்தில் இருந்த நீரவ் மோடி என்ற ஆடம்பர வைர, நகை வியாபாரி யும், அவருடன் தற்போது நாட்டின் நான்கு மிகப் பெரிய வைரவியாபார நிறுவனங்களை வைத்திருக் கின்ற அவரது மாமனான மெஹூல் சோக்ஸியும், அவரது பிற உறவினர்களும் வேண்டியவர்களும் வங்கி அமைப்புமுறையை உடைத்தெறிந்து, ஒரு முன்னணி பொதுத்துறை வங்கியான பஞ்சாப் நேஷனல் வங்கியை ஏமாற்றி, ரூபாய் **11,300** கோடியை மோசடி செய்திருக்கின்றனர். இத்தொகை யானது நிச்சயம் **20,000** கோடி ரூபாய்களுக்கும் மேலாக இருக்குமென நம்பத்தகுந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

இச்சம்பவம் நடந்த சில நாட்களிலேயே, ஒரு ஆடம்பர பேனா தயாரிப்பு நிறுவனமான ரோட்டோ மேக் குளோபல் பிரைவேட் லிமிட்டெட்டின் உரிமை யாளரான விக்ரம் கோத்தாரி என்பவர் ஏழு வங்கி களை ஏமாற்றி, வங்கிக் கடன்களை சுருட்டியதன் மூலம், **3,695** கோடியை மோசடி செய்திருக்கிறார் என்பது கண்டறியப்பட்டுள்ளது. அதன் பின்னர், முன்னணி **11** கடனாளி குழுமங்களைச் சேர்ந்த **9,000**க்கும் மேலான அதுபோன்ற வங்கிக்கணக்குகள் மூலம், ரூபாய் **26,000** கோடி ரூபாய்களை செலுத்தத் தவறியுள்ளது தெரியவந்துள்ளது.

ஆளும் ஏகபோகங்களின் மிகவும் நம்பிக்கைக் குரிய இரண்டு கட்சிகளான பாஜக, காங்கிரஸ் கட்சிகள் இது போன்ற மிகப்பெரும் குற்றங்களுக்கு உடந்தையாயிருந்துகொண்டு, பாடுபடும் கோடிக் கணக்கான மக்களை பலிகடாவாக்கியது யார் என்பதை விட்டுவிட்டு, இவர்களில் யார் தூய்மை யானவர் என்பதை நிரூபிப்பதற்காக ஒரு சம்பிர தாய சடங்காக வெற்றுச்சண்டையிட்டுக்கொண்டு, ஒருவரையொருவர் குற்றம் சாட்டுவதில் மும்முர மாக ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றனர். இத்தருணத் தில், மக்களின் நலன்களைப் பாதுகாத்திடவேண்டும் எனும் கண்ணோட்டத்தில் இந்நிகழ்வின் முழு விபரத் தையும் ஆழமாக அறிய விரும்புபவர்கள், சில உண்மைகளையும், தொடர் நிகழ்வுகளின் சில அம்சங் களையும் கருத்தில் கொள்ள வேண்டியிருக்கிறது.

## பரந்த அளவிலான இத்தகைய தூறையாடல் எப்படி நடந்தது ?

முதலாவதாக, **25** வருடங்களுக்கு முன்பு நடந்த ஹர்ஷத் மேத்தா ஊழல், அதற்குபின்னர் நடந்த, வங்கி நிதி தவறாகப் பயன்படுத்தப்பட்ட எண்ணற்ற சம்பவங்களுக்குப் பின்னரும்கூட, இத்தகைய வங்கி களைப் பாதுகாத்திடவும் வரி செலுத்துவோரின் பணம் திட்டமிட்டு சூறையாடிக் கொள்ளையடிக்கப் படுவதிலிருந்து பாதுகாத்திடவும் அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் எதுவும் செய்யவில்லை என்பது அப்பட்டமாகத் தெரிகின்றது. கடந்த ஐந்தாண்டு களில், ரூ**61,260** கோடியளவிலான **8,670**க்கும் மேலான வங்கி மோசடிகள் நடந்துள்ளன. இப்போது வெளி வந்துள்ள பஞ்சாப் நேஷனல் வங்கி மோசடியானது, இந்தியாவின் வங்கித் தொழில், வணிகர்கள் மற்றும் தொழிலதிபர்கள் போர்வையிலிருக்கும் மோசடிக் காரர்களுக்கும் ஏமாற்றுக்காரர்களுக்கும் தொடர்ச் சியாக பணத்தை அள்ளிக் கொடுத்துக்கொண்டிருக் கின்றது என்ற மறுக்கமுடியாத உண்மையைச் சுட்டிக்காண்பிக்கிறது. உண்மையில், ஹர்ஷத் மேத்தா முதற்கொண்டு நீரவ் மோடி வரையிலான இத்தகைய ஏமாற்றுக்காரர்கள், வங்கிகளை கொள்ளையடிக்கும் புதிய புதிய வழிகளை கண்டுபிடித்துக்கொண்டே இருக்கின்றனர்.

நீரவ் மோடி மற்றும் அவரது கூட்டாளிகள் செய்த மோசடிக்கான வழிமுறையானது பொறுப் பேற்புக் கடிதம் (எல்ஓயு) (Letter Of Undertaking - LOU) மூலம் தில்லுமுல்லு செய்வதாகும். சர்வதேச வர்த்தகத்தில் ஒரு பொதுவான பரிவர்த்தனை முறை என்பது வணிகர்கள், வழங்குபவர்கள் (Suppliers) மற்றும் இதுபோன்றவர்களுக்கு பணம் செலுத்திட வங்கிக்கடன் பெறுவதாகும். அதன் பொருட்டு வணிகர்கள் அல்லது வணிக நிறுவனங்கள் வெளி நாடுகளிலுள்ள வங்கிகளில் கடன் வாங்குவதற்காக, ஒரு வங்கியிடமிருந்து, அது பெரும்பாலும் சொந்த நாட்டு வங்கியிடமிருந்து எல்ஓயு வேண்டுவார்கள். அத்தகைய எல்ஓயு–இன்படி உள்நாட்டு வங்கியானது வெளிநாட்டிலிருக்கும் அதன் கிளை வங்கியில் குறுகிய காலக் கடன் வடிவத்தில் அதன் வாடிக்கை யாளரை கடன் பெற்றுக்கொள்ள அனுமதிக்கும். எல்ஓயு என்பது ஒரு வங்கி உத்திரவாதம் (Bank Guarantee) போல செயல்படும். ஆனால், வங்கியிட மிருந்து எல்ஓயு பெற வேண்டுமானால், வணிகர்கள் அல்லது வணிக நிறுவனங்கள் எல்ஓயு வழங்கிடும் வங்கிக்கு பெயரளவிற்கு குறைந்தபட்சத் தொகை ஒன்றைச் செலுத்திட வேண்டும். அதற்கேற்ப அவர் களுக்கு கடன் அளவு (Credit Limit) வழங்கப்படும். ஆனால், நீரவ் மோடி அவரது வைர வியாபார நிறுவனங்களின் பெயரில் கடன் அளவு குறிப்பிடப் படாமலேயே, குறைந்தபட்ச பணம் எதுவும் செலுத் தாமலேயே அத்தகைய எல்ஓயுக்களை மும்பை யிலுள்ள பஞ்சாப் நேஷனல் வங்கியின் பிராடி சாலை கிளையில் பெற்றிருக்கிறார் என குற்றம் சாட்டப்பட்டுள்ளார்.

பஞ்சாப் நேஷனல் வங்கியின் பதிவேடுகளில் அத்தகைய எல்ஓயுக்கள் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்க விஷயமாகும். அவ்வாறான எல்ஓயுக் களின் அடிப்படையில் நீரவ் மோடி, அவரது நெருங்கிய உறவினர்கள், அவரது கூட்டாளிகள், வணிக பங்குதாரர்கள் இந்தியாவின் அலகாபாத் வங்கி, ஆக்சிஸ் வங்கிகளின் வெளிநாட்டுக்கிளை களில் எண்ணற்ற கடன்களை வாங்கிக்கொண்டே யிருந்தனர். சாதாரணமாக, நீரவ் மோடி மற்றும் அவரது கூட்டாளிகளின் நிறுவனங்கள் வாங்கிய கடனுடன் வட்டியையும் செலுத்திட வேண்டி யிருக்கும். ஆனால் இன்றுவரையில், கடன் வாங்கிய வர்கள் திருப்பிச்செலுத்திட பணம் இல்லையென கேட்டுக்கொண்டதால், அனைத்துக் கடன்களும் திரும்பச் செலுத்தப்படாமல் புதிய கடன்களுடன் சேர்க்கப்பட்டுவிட்டது என குற்றஞ்சாட்டப் பட்டுள்ளது. இத்தகைய சூழ்நிலைகளில், கடன் பெற்றவர் அக்கடனை திருப்பிச் செலுத்தாமலிருக் கும் பட்சத்தில், எல்ஓயு வழங்கிய வங்கியானது (இப்பிரச்சினையில் பஞ்சாப் நேஷனல் வங்கி) அதன் வாடிக்கையாளர்கள் சார்பாக அது வழங்கிய உத்தரவதத்திற்கு மதிப்பளிக்க கடமைப்பட்டுள்ளது. ஆக, பஞ்சாப் நேஷனல் வங்கியானது நீரவ் மோடி யும் அவரது கூட்டாளிகளும் பெற்ற கடன்களை வட்டி, அபராதம் ஏதுமிருப்பின் அதையும் சேர்த்து அலகாபாத் வங்கி, ஆக்சிஸ் வங்கி மற்றும் பிற வற்றிற்கு திரும்பச் செலுத்தியாக வேண்டும்.

நீரவ் மோடியின் நிறுவனம், அதன் வெளிநாட்டு வழங்கல்காரர்களுக்கு (Suppliers) பணம் தர, மேற் கொண்டு எல்ஓயு வழங்கிடக் கேட்டு அணுகிய போதுதான் இந்த மோசடி கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. நீரவ் மோடியின் நிறுவனம் 100 சதவீத பிணையப் பத்திரம் (Collateral) வைத்திருக்க வேண்டும் என்ற அடிப்படையில் சில பஞ்சாப் நேஷனல் வங்கி அதிகாரிகள் அத்தகைய எல்.ஓ.யு வேண்டுகோளுக்கு மறுத்துவிட்டனர். கடந்த காலங் களில் இவ்வாறான தொகை ஏதும் கட்டப்பட வில்லை, ஆதலால் இது போன்ற நிபந்தனையை தள்ளுபடி செய்திட வேண்டும் என நீரவ் மோடியின் நிறுவனம் வாதிட்டது. இதனைச் சரிபார்த்திட, சம்மந்தப்பட்ட அதிகாரிகள் பதிவேடுகளை ஆராய்ந்து பார்த்தபோதுதான் அது போன்ற எந்த ஒரு பரிவர்த் தனையும் நடந்ததற்கான அடையாளங்கள் ஏது மில்லை என்பதைக் கண்டுபிடித்தார்கள். வங்கி உத்தரவாதங்கள் / எல்ஓயுக்கள் யாவும் விதிகளை மீறி, மோசடி செய்து, அங்கீகரிக்கப்படாமல் வழங்கப் பட்டிருக்கின்றன என்பதே இதன் உட்பொருளாகும். பஞ்சாப் நேஷனல் வங்கியின் உள் தணிக்கைப் பிரிவு கூடவே சட்டரீதியான வெளித்தணிக்கை நிறுவனங்கள் இரண்டும் நடத்திய பல்வேறு தணிக்கைகளின் உள் (Internal Audit) மற்றும் சமகால தணிக்கைகள் (Concurrent Audits) நடந்த பின்னரும் கூட இத்தகைய மோசடி எப்படி கண்டுபிடிக்க முடியாமல் போனது என்பதுதான் விளங்காத ஒன்றாகும். இந்திய ரிசர்வ் வங்கி போன்ற ஒழுங்கு முறை அமைப்புகளின் பார்வையிலிருந்து இது எப்படி தப்பித்தது என்பதும்கூட ஒரு புரியாத புதிராக உள்ளது.

நீரவ் மோடிக்கும் அவரது கூட்டாளிகளுக்கும் வழங்கப்பட்ட எல்ஓயுக்கள் போலியானவை என கருதினாலும்கூட, பின்னர் இது குறித்த எச்சரிக்கை ஏன் எழுப்பப்படவில்லை? இத்தகைய போலியான எல்ஓயுக்களை வழங்குவது கிரிமினல் குற்றமென யாருக்குத்தான் தெரியாது? இருப்பினும், பல்வேறு தடுப்பரண்கள் இருந்தபோதிலும் இந்த மோசடி பற்றி எவருக்கும் தெரியாது எனும் பஞ்சாப் நேஷனல் வங்கி அதிகாரிகளின் வாதங்களை ஒருவர்

தொடர்ச்சி 4ம் பக்கம்

## மார்ச் 14: பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவர்

# கார்ல் மார்க்ஸ் 135வது நினைவுதினம்




மார்ச் 14, 2018 அன்று சென்னை, தி நகர், பஸ்நிலையம் அருகில் நடைபெற்ற கார்ல் மார்க்ஸ் அவர்களின் நினைவுதினப் பொதுக்கூட்டத்தில் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்), மாநிலச் செயலாளர், தோழர் A ரெங்கசாமி உரையாற்றுகிறார்

## நீரவ் மோடி–பஞ்சாப் நேஷனல் வங்கி மோசடி

# ஊழலில் மூழ்கியிருக்கும் கும்பலுக்கு வங்கிகள் முழுமையாக அடிபணிந்துவிட்டன

3ம் பக்கத் தொடர்ச்சி

நம்பத்தான் வேண்டும்! மோசடி கும்பல் ஒவ்வொரு செங்கலாக, பட்டப்பகலில் வங்கியைக் கொள்ளையடித்துக் கொண்டிருக்கையில், பஞ்சாப் நேஷனல் வங்கி அதிகாரிகளுக்கு கண்காணிப் பிற்கான ஆகச்சிறந்த விருது வழங்கப்பட்டிருப்பது புதிரான ஒன்று.

### ஏமாற்றும் மோசடிகளும் ஆட்சியதிகாரத்தின் உதவியுடன், உடந்தையுடன்தான் நடக்கின்றன

பல்வேறு பதவிகளிலிருக்கும் உயரதிகாரிகளின் உடந்தையின்றி இத்தனை காலமாக பெருமளவிலான இத்தகைய ஏமாற்றுக்கள் நடைபெற முடியுமா? “இல்லை, இது நடைபெற முடியாது” என பள்ளி செல்லும் குழந்தைகூட சொல்லும். ஆனால், இந்த நாட்டில் விசாரணை செய்கின்ற அதிகாரிகள் வேறு விதமாக உணர்கின்றனர். முன்பும்கூட, இது போன்ற மிகப்பெரும் மோசடிகள் அல்லது நிதி ஏய்ப்புகள் வெளிச்சத்துக்கு வந்தபோது, உயர் பதவியிலிருக்கும் ஒருவர்கூட தொடப்படவில்லை. ஓர் அசாதாரண சூழ்நிலையில் எவராவது ஒருவர் குற்றம் சுமத்தப் பட்டால், அவர் விரைவிலேயே அக்குற்றத்திலிருந்து விடுவிக்கப்படுவார், அல்லது குற்றச்சாட்டுக்கள் தெளிவாக மூடி மறைக்கப்பட்டுவிடும். புலன் விசாரணை செய்யும் அமைப்புகள் முக்கியத்துவ மில்லாத சிறு நபர்களை கைதுசெய்து காவலில் வைத்து பின்னர் குற்றம் புரிந்தவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுத்து விட்டோம் என தம்பமடித்துக் கொள்ளும். அதிகபட்சமாக, சட்டத்தின் முன்பாக அனைவரும் சமம் என்றும், நீதி வழங்கிட சட்டம் எவ்வாறு தன் கடமையைச் செய்கின்றது என்பதை நிரூபித்திட, அத்தகைய பலிகடாவாக்கப்பட்டவர்கள் மீது சில வழக்கமான தண்டனை நடவடிக்கைகளை மேற்கொள்ளும், அது பின்னர் ‘ஜனநாயகத்தின் வெற்றி’ என உயர்வாகப் பேசப்படும்.

ஏன் இவ்வாறு நடக்கிறது? ஏனென்றால், மோசடியாளர்களும் ஏமாற்றுக்காரர்களும் ஆளும் கட்சியின் நெருங்கிய நண்பர்களாக இருந்து கொண்டிருப்பதால்தான். அவர்கள்தான் ஆளும் கட்சித் தலைவர்களுக்கு நிதியுதவி செய்துகொண்டும், அவர்களுக்கு வேண்டிய வசதிகளை செய்து கொடுத்துக்கொண்டும், அவர்களின் அந்தஸ்தையும் பதவியதிகாரத்தையும் உத்தரவாதப்படுத்திக் கொண்டும், அவர்களின் செல்வப் பொக்கிஷத்தை நிரப்பிக்கொண்டும், தேர்தலில் அவர்கள் வெற்றி பெற உதவிசெய்துகொண்டும் இருக்கின்றனர். பூர்ஷ்வா கட்சிகளுக்கு பெருமளவில் நிதியுதவி செய்துவரும் இந்த உண்மை இன்று பள்ளி செல்லும் குழந்தைகூட அறிந்ததே. இதுபோன்ற காட்சிகள் ஒட்டுமொத்த முதலாளித்துவ உலகில் பொதுவாகக் காணக்கூடிய ஒன்றே.

தற்போதைய நீரவ் மோடி மோசடி விஷயத்திலும் கூட, பாஜக தலைமையிலான மத்திய அரசாங்கமும் உயர்மட்ட அதிகாரிகளும் இந்நிகழ்வுக்குப்பின்னர் இப்போதுதான் தங்களுக்கு விஷயம் தெரிய வந்துள்ளது என பாசாங்கு செய்கின்றனர். வழக்கம் போலவே, உண்மையான குற்றவாளிகள் ஊழல் முதலாளித்துவ ஆட்சியாளர்களால் பாதுகாக்கப் பட்டுக்கொண்டிருக்கையில், மத்தியப் புலனாய்வு அமைப்பானது (CBI), பஞ்சாப் நேஷனல் வங்கியில் சில பலிகடாக்களை கண்டுபிடித்திருக்கிறது. கண் துடைப்பு இங்குதான் இருக்கின்றது. மிக முக்கியமாக, அரசாங்கங்கள், அவர்கள் காங்கிரஸ் அல்லது பாஜக என எதுவாயிருந்தாலும், பிரதமர்கள் உள்ளிட்ட அமைச்சர்களின் கண்ணெதிரே கண்டுகொள்ளப் படாமல், தங்குதடையின்றி நடைபெறும் இத்தகைய மிகப்பெரும் திருட்டு, வழிப்பறிக்கொள்ளை, களவாடல், பொதுப்பணத்தை களவாடல், ஊழல், சட்ட விதிகளை வளைத்தல் ஆகியன பற்றி தாங்கள் ஏதுமறியா அப்பாவிகள் என வாதிடுகின்றனர். கடந்தகால நிகழ்வுகள் அனைத்திலும் நாம் இதைப் பார்த்தோம். இப்போதைய நீரவ் மோடி விஷயத் திலும்கூட மிகச்சரியாக அதுவே அரங்கேறியிருப் பதை நாம் பார்க்கிறோம்.

### ‘ஒன்றுமறியா அப்பாவி’ என நாடகமாடும் பாஜகவும் அதன் அரசாங்கமும்

பாஜகவுக்கும் அதன் அரசாங்கத்திற்கும் இக்குற்றம் குறித்து கொஞ்சம்கூடத் தெரியாதா? முதலாவதாக, வங்கிக்கடனை வேண்டுமென்றே கட்டத்தவறியவர்களுக்கு அது பல்வேறு வழிகளில் நியாயமற்ற பொது மன்னிப்பை வழங்கிக் கொண்டி ருக்கின்றது. வேண்டுமென்றே கட்டத்தவறுதல் என்பதன் பொருள், எந்த குறிப்பிட்ட நோக்கத் திற்காகக் நிதி தரப்பட்டதோ அதை விடுத்து வேறொன்றுக்கு அதைத் திருப்பிவிடுவது, பணத்தை சூறையாடுவது அல்லது கடன் வாங்கிட பிணைய மாக வைக்கப்பட்ட சொத்துக்களை விற்றுவிடுவது என்பதாகும்.

மோசமான கடன்கள் அல்லது வாராக்கடன்கள் (NPA -Non Performing Assets) ரூபாய் 11 லட்சம் கோடியைத் தாண்டிவிட்டது. தகுதியில்லாமல் வழங்கப்பட்ட கடன்களில் மூன்றில் இரண்டு பங்கு இந்நாட்டின் ஏகபோகங்கள் வைத்திருக்கும் மிகப் பெரும் வெறும் 24 நிறுவனங்களுக்குரியதாகும். அதிகாரபூர்வமாக ஒத்துக்கொண்டபடி, வேண்டு மென்றே கட்டத்தவறியது பாஜக ஆட்சியில் நான்கு மடங்காகிவிட்டது. ஆனால், பாராளுமன்றத்தில் முன்வைத்த 2018–19ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் அறிவிப்பின்போது, போலியான வளர்ச்சி குறித்து தங்களைத்தாங்களே புகழ்ந்துகொண்டு மும்முர மாகப் பேசிய நிதியமைச்சரோ அல்லது பிரதம மந்திரியோ, தொடர்ந்து அச்சமூட்டும் வகையில் அதிகரித்துக்கொண்டிருக்கும் வாராக்கடன்கள் குறித்து ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. அதற்குப் பதிலாக, நிதியமைச்சர் சிரமப்பட்டுக்கொண்டிருக்கும் வங்கிகளுக்கு மறுமுதலீடு செய்வது (Recapitalisation) பற்றிப் பேசுகிறார். அதன் பொருள், அத்தகைய வங்கி களின் இழப்பை ஈடு செய்திட மக்களின் பொதுப் பணத்தை எடுக்கப்போகிறார் என்பதாகும். அவரோ அல்லது பிரதமரோ இவ்வாறு வேண்டுமென்றே கடன் செலுத்தத்தவறியது பற்றி தங்களுக்கு ஏதும் தெரியாது எனக்கூற விரும்புகின்றனரா? அத்துடன் கடன் கட்டத்தவறியவர்களுக்கு தொடர்ந்து மீண்டும் சாதகமாகச் செயல்பட விரும்புகின்றனரா? குறைந்த பட்ச ஞானம் கொண்ட எவரும் இவர்களின் “ஒன்று மறியா அப்பாவித்தனத்தை” ஏற்றுக்கொள்வார்களா?

இரண்டாவதாக, நீரவ் மோடி மோசடி விவகாரம் வெளிவந்த முதல் சில நாட்களுக்கு நிதியமைச் சரும் பிரதம மந்திரியும் எதுவும் நடந்திடவில்லை என்பதுபோல் வாய்மூடி அமைதி காத்தனர். ஆனால் அதன் பின்னர், பொதுமக்களிடம் காணப்பட்ட எதிர்ப்பைக்கண்டு, இந்த மோசடியானது 2011இல் காங்கிரஸ் ஆட்சி காலத்திலேயே நடக்க ஆரம்பித்து விட்டது என வாதிட்டு, நிலைமையைச் சரிகட்ட பிற கேபினட் அமைச்சர்களை முன்னிறுத்தினர். அவர்கள் பாதகமின்றி தப்பித்துவிடலாம் என்ற எண்ணத்தில் அவ்வாறு செய்தனர். ஆனால், விபரங்கள் சுட்டிக்காண்பிப்பது யாதெனில், 293 எல்ஓயுக்களும் கடந்த இரண்டாண்டுகளில்தான் வழங்கப்பட்டிருக்கின்றன. மிக முக்கியமான உண்மை எதுவெனில், ஊடகச் செய்திகளின்படி, பிரதமர் அலுவலகம் உட்பட, அரசாங்கத்திற்கு நடந்து கொண்டிருக்கும் மோசடி குறித்த எச்சரிக்கை மீண்டும் மீண்டும் தரப்பட்டது. முதல் நிகழ்வாக, வைபவ் குரானியா அண்ட் ஆர்எம் கிரீன் சொலூஷன் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் 2015 மே, 7 அன்று கார்ப்பொரேட் விவகாரங்கள் அமைச்சகத்திற்கு ஒரு புகார் அளித்திருந்தது. அதன் நகலும்கூட பிரதமர் அலுவலகம், அமலாக்கப் பிரிவு இயக்குனரகம், தீவிர ஏமாற்றுப் புலனாய்வு அலுவலகம் ஆகியவற்றிற்கும் அனுப்பப்பட்டது. ஆனால், எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

திக்விஜய்சிங் ஜடேஜா என்ற மற்றொரு நபர், தன்னை ஏமாற்றிவிட்டதாக மெஹுல் சோக்சி மற்றும் பிறருக்கு எதிராக குஜராத்திலுள்ள அகமதாபாத் பொருளாதாரக் குற்றப்பிரிவில் முதல் தகவல் அறிக்கை ஒன்றை (எஃப்ஐஆர்) பதிவு செய்திருந்தார். சோக்சியும் பிறரும் 9,872 ஆயிரம் கோடி ரூபாய்களை கடனாக வாங்கியிருப்பதாகவும், பின்னர் அவர்கள் இந்தியாவிலிருந்து வெளியேறி தப்பிக்கவுள்ள தாகவும் சுட்டிக்காண்பித்து 2016, ஜூலை 20 அன்று ஓர் பிரமாணப்பத்திரத்தையும்கூட ஜடேஜா தாக்கல் செய்திருந்தார். ஆனால், எவ்வித வழக்கும் பதிவு செய்யப்படவில்லை.

மூன்றாவது நிகழ்வாக, “கீதாஞ்சலி ஜெம்ஸ் லிமிடெட் மற்றும் அதன் நிர்வாக இயக்குனரான மெஹுல் சி சோக்சிக்கு எதிராக பிரதமர் அலுவலகம் மற்றும் சிஐசிக்கு அளிக்கப்பட்ட புகார்” என்பதாகக் குறிப்பிடப்பட்ட பொருளிட்டு பெங்களூருவைச் சேர்ந்த ஹரி பிரசாத் என்ற ஒரு தொழிலதிபர் ஒரு புகார் கடிதம் எழுதியிருந்தார் அதில், “விஜய் மல்லையா, சகாரா குழுமத்தின் சுப்ரத் ராய் அல்லது சத்யம் குழுமத்தின் ராமலிங்க ராஜூ மோசடி போன்றே . . . இந்தியர்களின் பொதுப்பணம் 1,000 கோடி ரூபாய் அளவிலான இந்த மோசடியும் ஏய்ப்பும் மும்பையைச் சேர்ந்த ஒருவரால் செய்யப்பட்டிருக்கிறது.” எனக் குறிப்பிடப் பட்டுள்ளது. கீதஞ்சலி ஜெம்ஸ்–இம் சோக்சியும் சேர்ந்துகொண்டு இந்தியாவிலிருக்கும் துணை நிறுவனங்கள் மற்றும் வெளிநாடுகளிலிருக்கும் போலி நிறுவனங்கள் மூலம் ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்கள் சூறையாடிக்கொண்டிருக்கின்றனர் என அது குற்றஞ்சாட்டியிருக்கிறது. புகாரளித்தவர் மெஹுல் சோக்சிக்கும் அவரோடு தொடர்புடைய பல்வேறு நிறுவனங்களுக்கும் எதிராக, கிளை நிறுவன உரிமை பெற்றவர்களின் புகார்களின் நகல் களையும் இணைத்திருந்தார். ஆயினும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

2015இல் குஜராத்தின் சச்சினில் உள்ள சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் இருக்கும் மெஹுலின் வைர ஆபரணங்கள் வடிவமைக்கும் நிறுவனத்தில் வருவாய்ப் புலனாய்வுத்துறை (டிஆர்ஐ – Directorate of Revenue Intelligence) திடீர்ச் சோதனை மேற் கொண்டது. நீரவ் மோடி குழுமம் ஏற்றுமதிக்காக வைக்கப்பட்டிருந்த ரூபாய் 1,216 கோடிகள் மதிப்புள்ள வைரங்களை சிறப்புப் பொருளாதார மண்டலத்தி லிருந்து சட்டவிரோதமாக உள்நாட்டுச் சந்தையில் விற்பனைக்காக திருப்பிவிட்டது என்பது அச் சோதனையில் கண்டறியப்பட்டது. அரசாங்க திட்டங் களின் மூலமாக கிடைக்கக்கூடிய பலன்களை அனுப வித்திட, இவ்வாறு வைரங்களை மாற்றி அனுப்பி யதன் மூலம் நீரவ் மோடியின் நிறுவனம் ரூபாய் 900 கோடிகளை அரசாங்கத்திடமிருந்து ஏமாற்றி யிருப்பதாக குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது. ஆனால், வெறும் 37 கோடி ரூபாய்களே அபராதமாக விதிக்கப் பட்டிருக்கிறது.

மற்றொருபுறம், கடந்த மாதம் டாவோஸ்–இல் நடந்த உலகப் பொருளாதார அமைப்பு மாநாட்டில், இந்திய வணிகர்கள், கார்ப்பொரேட் தலைவர்கள் அடங்கிய பிரதிநிதிகள் குழுவில் நீரவ் மோடியும் ஒரு அங்கத்தினராவார். அங்கு எடுக்கப்பட்ட கூட்டுப் புகைப்படத்தில் பிரதம மந்திரி நரேந்திர மோடியுடன் இவரும் அமர்ந்திருக்கின்றார். 2016இல் டாவோஸில் நடந்த மாநாட்டுக்குச் சென்ற நிதியமைச்சர் அருண் ஜெட்லி தலைமையில் சென்ற பிரதிநிதிக்குழுவிலும் இவர் இடம்பெற்றிருக்கிறார். அதுமட்டுமல்ல. மெஹுல் சோக்சி தான் நடத்தி வந்த நிதி நிறுவனத் தில் சேர்ந்திடுமாறு ஆசைகாட்டி ஏமாற்றிவிட்டார் என பாதிக்கப்பட்ட பலர் 2015இல் புகார் அளித் திருக்கின்றனர். ஆனால், குஜராத் போலீஸ் அவருக்கு எதிராக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய மறுத்துவிட்டது.

நரேந்திர மோடியின் “துடிப்பான குஜராத்” என்றழைக்கப்பட்ட பிரச்சாரத்தில், மெஹுலும்கூட பரந்து பட்ட அளவில் விளம்பரத்தைப் பெற்றார். பாஜகவின் பல முக்கியத்தலைவர்களும் அவர்களது உறவினர்களும் மெஹுலின் நிறுவனமான கீதாஞ் சலியின் பிரச்சாரத்தில் கலந்துகொண்டார்கள் எனக் கூறப்பட்டது. நவம்பர் 2015இல் பிரதமர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு மெஹுல் சோக்சியும்கூட அழைக்கப்பட்டிருந்தார். அங்கு அவரது குறிப்பிடத்தக்க ஆபரண வியாபாரத்திற் காக குஜராத்தின் சம்பிரதாய பாணியில் நரேந்திர மோடி அவரை “மெஹுல்பாய்” என அழைத்ததாகவும் கூறப்பட்டது. பஞ்சாப் சட்டசபைத் தேர்தலில் பாஜகவின் வேட்பாளராக நிறுத்தப் பட்டு தோல்வியுற்ற பிரதம மந்திரியின் நெருங்கிய சகா ஒருவர் பஞ்சாப் நேஷனல் வங்கியின் இயக்குனர் (Board of Directors) போர்டில் சேர்க்கப்பட்டிருக் கிறார் எனவும் கூறப்படுகிறது.

தொடர்ச்சி 5ம் பக்கம்

## நீரவ் மோடி–பஞ்சாப் நேஷனல் வங்கி மோசடி

# வங்கி மோசடிகள்: மக்கள் மீதான கொலைபாதகத் தாக்குதல்

4ம் பக்கத் தொடர்ச்சி

மிகவும் குறிப்பிடத்தக்க வகையில், இப்போது வெளிநாட்டில் ரகசியமாக மறைந்திருக்கும் நீரவ் மோடி, வங்கியின் செயல்களினால் தனது வியாபாரச்சின்னமும் தொழிலும் அழிந்துபோனதாக எதிர்க்குற்றச்சாட்டு கூறி, கடன் பாக்கியை செலுத்துவதில் தடையேற்படுத்திவிட்டது என பஞ்சாப் நேஷனல் வங்கிக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அனைத்துப் பரிவர்த்தனைகளும் ஆவணப்படுத்தப்பட்டிருப்பதால், தனது வாடிக்கையாளர் செயல்பாட்டில் எவ்வித முறைகேடும் நடக்கவில்லை என்றும், நீரவ் மோடி மற்றும் அவரது துணை நிறுவனங்கள் சம்மந்தப்பட்ட செயல்பாடுகளில் பஞ்சாப் நேஷனல் வங்கி முறையாக கட்டணம் வசூலித்திருக்கிறது எனவும் அவரது வழக்கறிஞர் வாதிடுகிறார். இறுதியாக, அமலாக்கத்துறை இயக்குனரகம், மத்தியப் புலனாய்வுத்துறை முன்பாக ஆஜராக முடியாது எனஅவர் நேரடியாக மறுத்ததுடன், பணத்தைத் திருப்பிச் செலுத்த முடியாதெனவும் அப்பட்டமாக மறுத்துள்ளார். என்னவொரு ஈடு இணையற்ற துணிச்சல்!

சட்டத்தின் பிடியிலிருந்து பாதகமேதுமில்லால் தப்பித்து ஓட உதவி கிடைக்குமளவுக்கு பலம் வாய்ந்த "தொடர்புகள்" இவர்களுக்கு இல்லையெனில், நீரவ் மோடிக்கும் அவரது கூட்டாளிகளுக்கும் அமலாக்கத்துறை இயக்குனரகம் மற்றும் மத்தியப் புலனாய்வுத்துறை அனுப்பிய சம்மனை அலட்சியம் செய்யும் துணிச்சலும் கடன்களை திருப்பிச்செலுத்த அப்பட்டமாக மறுக்கும் துணிச்சலும் வருமா? வெளிநாடுகளுக்கு மிகப் பாதுகாப்பாக பயணம்செய்ய அவர்கள் அனுமதிக்கப்பட்டு, சட்டத்தின் அனைத்துப் பிடியிலிருந்து நழுவி தப்பித்து ஓடிட, அவர்களுக்கு முன்னதாகவே தகவல் கிடைக்கப்பெறவில்லையா? ஒரு சில நடுத்தர மட்டத்திலிருக்கும் பஞ்சாப் நேஷனல் வங்கி அதிகாரிகள், தணிக்கை நிறுவனத்தின் துணையுடன் இந்த மோசடி குற்றத்தை புரிந்திருக்கின்றனர் எனும் நிதியமைச்சரின் கதையை நாம் அப்படியே நம்ப வேண்டுமா? நீரவ் மோடி, மெஹுல் சோக்சி, அவர்களின் கூட்டாளிகளுடன் பாஜக தலைவர்களுக்கு உறவு ஏதும் இல்லையென்று ஏற்றுக்கொள்ள வேண்டுமா? மாறாக, நடந்துகொண்டிருக்கும் குற்றத்துக்கு இடமளித்துக்கொண்டிருக்கும் பார்வையாளர்களாக அவர்கள் இருக்கவில்லையா?

### பாஜகவும் அதன் அரசாங்கமும் எந்த அளவுக்கு கறைபடியாமல் இருக்கின்றன?

நாட்டில் பிரதராகப் பதவியேற்றவுடன் தான் "பொதுப்பணத்தை மோசடி செய்யவும் மாட்டேன், அதை மற்றவர் செய்ய அனுமதிக்கவும் மாட்டேன்" என வாக்குறுதி அளித்ததை நினைவுபடுத்திப் பாருங்கள். ஒன்றன் பின் ஒன்றாக 2ஜி, கோல்கேட், ஐபிஎல் போன்ற மிகப்பெரும் மோசடிகள் நடைபெற்ற காங்கிரஸ் ஆட்சிதான் அப்போது அவரது இலக்கு என்பது வெளிப்படை. ஆனால், சட்டவிரோதமான, ஊழல் முறையில் பொதுப்பணத்தைக் கொள்ளையடித்துப் பதுக்கிட இப்போது எந்தத் தடையும் இல்லை என்பது அனைவரும் அறிந்த ரகசியம். ஏறக்குறைய, சர்ச்சைக்குரிய ரபேல் ஜெட் விமான ஊழலின் உண்மைவெளிவராத நேரத்தில் நீரவ் மோடியின் மோசடி வெளிவந்தது. இதில் அரசாங்கம் ரபேல் ஜெட் போர் விமானத்தின் வாங்கும் விலையை யூனிட்டுக்கு **526** கோடியாக இருந்ததை ***1,611*** கோடியென தன்னிச்சையாக, விளக்கிடமுடியாத அளவிற்கு அபரிமிதமாக உயர்த்திக்காட்டியிருக்கிறது என குற்றம் சாட்டப்பட்டிருந்தது. இவையனைத்தும், பொதுப் பணத்தில் மிகப்பெரும் ஊழல் புரிவதில் பாஜக ஆட்சியானது முன்பிருந்த காங்கிரஸ் ஆட்சியைவிட எவ்விதத்திலும் வேறுபட்டதில்லை என்பதையே காண்பிக்கின்றது. பூர்ஷ்வா வர்க்க நலன்களுக்கு அடிபணிந்து சேவை செய்யம் இந்த இரண்டு பிரதான ஆளும் கட்சிகள் இப்போது, சமயத்திற்கேற்றால்போல் ஒருவரையொருவர் குற்றஞ்சாட்டிக்கொண்டு "தன் குற்றம் தனக்குத் தெரியாது" எனும் பழமொழியை நிரூபித்துக் கொண்டிருக்கின்றன.

பிரதர் நரேந்திரமோடி, தான் "மிகையான ஆட்சியை குறைவான அரசாங்கத்துடன்" நிர்வகித்து வருவதாக தன்னைத்தானே பாராட்டிக்கொண்டிருக்கின்றார். அவரது நெருங்கிய உதவியாளரான நிதியமைச்சர் அருண் ஜெட்லி "நேர்மை திருவிழாவில்" நாட்டு மக்களுக்கு நேர்மையெனும் விருந்தளித்துக்கொண்டிருப்பதாக தம்பட்டமடித்துக் கொண்டிருக்கின்றார். ஆனால், நாட்டிலுள்ள ஏழைகளை கடுமையாகச் சுரண்டி, இரத்தத்தை உறிஞ்சியெடுத்துவரும் முதலாளித்துவவாதிகள் லாபத்தை அடைந்திட பாஜக ஆட்சியை குதூகலத்துடன் பயன்படுத்திக்கொண்டிருக்கின்றனர் என்பதையே உண்மைகள் சுட்டிக்காண்பிக்கின்றன. தற்போது, ஆளும் இந்திய ஏகபோகங்களின் இரண்டு பிரதான அமைப்புகளான அசோசெம் (ASSOCHEM), எஃப்ஐசிசிஐ (FICCI) ஆகியன, வங்கிகளை பிரச்சினைகளிலிருந்து விடுவித்திட பொதுத்துறை வங்கிகளை தனியார்மயமாக்க வேண்டும் என வாதிட்டுகொண்டிருக்கின்றன. ***736*** தனியார் வங்கிகள் திவாலாகிப் போனதையும், செயல்படாமல் போனதையும் அவை பொதுத்துறை வங்கிகளுடன் இணைக்கப்பட்டதையும் அவர்கள் சாமர்த்தியமாக மறைத்துவிட்டனர். தனியார்மயமாக்கல்தான் அருமருந்தாக இருந்திருக்குமானால், பின்னர் ஏன் அவை மூடப்பட்டும் பிறவற்றுடன் இணைக்கப்பட்டும் வந்தன.

சொந்தமாக தனியாக வைத்திருக்கும் வங்கிகளின் நிதியை தனிப்பட்ட தொழிலதிபர்கள் அவர்களின் குறுகிய பிரிவினைவாத நலன்களை, வியாபார நலன்களை முன்னிட்டு மட்டுமீறி பயன்படுத்திக் கொண்டிருக்கின்றனர் என்ற காரணத்தைக் காண்பித்து, ஆளும் முதலாளித்துவமும் அதற்குக் கீழ்ப்படிந்த நடக்கும் காங்கிரஸ் அரசாங்கமும் வங்கிகளை தேசியமயமாக்க முடிவெடுக்க எது தூண்டியது? இத்தகைய தனியார் வங்கிகள், சிறு கடன் பெற்றவர்கள் பெருமளவில் கடனை திருப்பிச்செலுத்தாதன் காரணமாக திவாலாகிப்போவதை நோக்கி நகரவில்லை என்பதும், ஆனால் உண்மையில் பெரும் வணிகக் குழுமங்கள் வங்கிப்பணத்தை கொள்ளையடித்ததன் காரணமாகத்தான் திவாலாகிப்போனது என்பதும் உண்மையில்லையா? இத்தகைய தனியார் வங்கிகளை ஊக்குவித்தவர்கள் அவர்களின் சொந்த வியாபாரத்திற்கும் பிற பயன்பாட்டிற்கும் வங்கி நிதியை சூறையாடவில்லையா?

தனியார் துறையில் இருக்கும் வங்கிகள் ஊழலிலிருந்து விடுபட்டிருக்கின்றன என் எண்ணுவது எப்படி விவேகமானதான இருக்கும்? ஆக, வேண்டுமென்றே அநியாயமாகக் கொள்ளையடிப்பவர்களிடமும் சூறையாடுபவர்களிடமும் தனியார்துறை வங்கிகள் இப்போது ஒப்படைக்கப்பட்டால், வங்கிகளில் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் பொதுமக்கள் பணம் பாதுகாப்பாக இருக்குமா? அல்லது இன்னும் அதிகமாக அபாயத்திற்குள்ளாகுமா? நீரவ் மோடியின் சம்பவமும் அதனைத்தொடர்ந்த வளர்ச்சிப்போக்குகளும் தங்களைத் தாங்களே மெச்சிக்கொண்டிருக்கும் பிரதமர், பிற பாஜக அமைச்சர்கள் மற்றும் தலைவர்களின் அருவருப்பான, பாசாங்குத்தனம் அப்பட்டமாக அம்பலப்பட்டிப்பதை காண்பிக்கின்றன. தங்களின் ஏகபோக கொள்ளைக்கும் சூறையாடுதலுக்குமான சொர்க்க பூமியாக நாட்டை மாற்றிட, இவரது ஆட்சியைப் பயன்படுத்திக்கொள்ள முடியும் என்பதால், உலகளாவிய மற்றும் உள்நாட்டு கார்ப்பொரேட் பிரபுக்கள் மானசீகமாக இந்தியாவில் மோடியின் ஆட்சியை ஆதரித்திருத்தனர் என்பதையும்கூட இது காண்பிக்கின்றது.

### ஒரு நிச்சயமான திட்டம் இருப்பது தெரிகிறது

கவனமாகப் பார்த்தோமேயானால், ஆளும் முதலாளித்துவத்திற்குக் கீழ்ப்படிந்து நடக்கும் பாஜக அரசாங்கம், பொருளாதாரச் சீர்திருத்தங்கள் என்ற பெயரில், பெரிய தொழில் குடும்பங்களுக்கும் மிகப்பெரும் கார்ப்பொரேட் நிறுவனங்களுக்கும் தகாத பலன்களை அள்ளித்தருவதற்கான ஓர் நிச்சயமான திட்டத்தை கடைபிடித்துவருவது தெரியவரும். முதலாவதாக அது செய்தது, கருப்புப்பணத்தை கண்டுபிடிப்பதற்கு என செய்யப்பட்ட பணமதிப்பு நீக்கம் எனும் 'ஸ்டண்ட்' ஆகும். ஆனால், மாறாக இன்றைய முதலாளித்துவம் கருப்புப்பணத்தை உருவாக்கி, பாதுகாத்து கொண்டாடிவருவதால், புழக்கத்தில் இருந்த சிறிதளவு கருப்புப்பணரொக்கத்தையெல்லாம் வெள்ளைப்பணமாக மாற்றிட அது உதவியது.

இரண்டாவதாக, அம்பானிகள், அதானிகள், நீரவ் மோடிகள் அவர்களின் விருப்பப்படி ஆனந்தமாக மக்களின் பணத்தை எதற்கும் கவலைப்படாமல் சூறையாடிட, சாமானிய மக்கள் கையில் வைத்திருந்த கடைசிப் பணத்தையும்கூட வங்கிகளில் செலுத்தக் கட்டாயப்படுத்தப்பட்டனர். மற்றொருபுறம், பாடுபடும் சாமானிய மக்கள், ஏழை விவசாயிகள், தினக்கூலிகள், தற்காலிகத் தொழிலாளர்கள், நடைபாதை வியாபாரிகள், சிறு பெட்டிக்கடை வைத்திருப்போர் மற்றும் நடுத்தர வியாபாரிகள் வாழ்க்கையும்கூட சின்னாபின்னாமாகியது. அதன் பின்பு, 'தொழிற்சாலைகளை' நிறுவுவதற்காக முதலாளித்துவ உடைமையாளர்களுக்கு மலிவான வங்கிக் கடன் வழங்கப்போகிறோம் என்று கூறிக்கொண்டு, வங்கி சேமிப்பு மீதான வட்டி தொடர்ந்து குறைக்கப்பட்டுக்கொண்டே இருக்கின்றது. தேசிய சேமிப்புத் திட்டத்தின் மீதான வட்டியும்கூட தொடர்ந்து குறைக்கப்பட்டு, சாமானிய மக்களின் வாழ்க்கை பெரும் சிரமத்திற்கு உள்ளாகிவிட்டது.

சட்டவிரோதமாக ஏமாற்றுத்தனமாக நிதியை பெற்றுவருவது ஒன்றன்பின் ஒன்றாக வெளிச்சத்திற்கு வந்தபின்னர், இயற்கையாகவே எழுகின்ற கேள்வி என்னவெனில், இத்தகைய கடன் பெரும் நிறுவனங்கள் அல்லது அமைப்புகள் யாவும் உண்மையான நிறுவனங்கள்தானா? அல்லது முதலாளித்துவ உடைமையாளர்களின் பணப்பெட்டியை நிரப்பிட மக்களின் பணத்தை உறிஞ்சுவதற்கான சாதனமாக உருவாக்கப்பட்ட போலியான அல்லது சந்தேகத்திற்குரிய நிறுவனங்களா? என்பதுதான்.

அதன் பின்னர், வரி கட்டுதலை இலகுவாக்குகிறோம், வரி ஏய்ப்பைத் தடுக்கப்போகிறோம் எனும் பெயரில் ஜிஎஸ்டி அறிமுகப்படுத்தப்பட்டது. முதலாளித்துவ ஏகாதிபத்திய ஆட்சியாளர்களும் அதன் அரசியல் நிர்வாகிகளும் மற்றும் காபந்து அரசாங்கங்களும் உள்நாட்டு வெளிநாட்டு ஏகபோகங்களின், கார்ப்பொரேட்டுக்களின் நலன்களுக்கு சேவைசெய்யும் பொருட்டே சட்டங்களை வடிவமைத்து விதிகளை நடைமுறைப்படுத்தி, செயல்முறையை மறுசீரமைப்பார்கள் என்பதையும் அத்துடன் முதலாளித்துவ–ஏகாதிபத்திய அரசின் கைகளில் அரசியல் அதிகாரத்தை குவிப்பதுடன், பொருளாதார அதிகாரத்தை மேலும் மேலும் குவித்து, பலப்படுத்தி, மையப்படுத்திடும் திட்டத்தை செயல்முறைப்படுத்துவார்கள் என்பதையும் சொல்லத் தேவையில்லை.

இத்தகைய வஞ்சக நோக்கத்தை மூடிமறைக்க, ஆளும்கட்சித் தலைவர்களும் அமைச்சர்களும் அடுக்கடுக்கான வாக்குறுதிகளையும் உத்தரவாதங்களையும் தருவதில் ஈடுபட்டுக்கொண்டு அனைத்து வகையான தீவிர பாவனைகளையும் செய்து கொண்டிருக்கின்றனர். ஜிஎஸ்டி விவகாரத்தில் கூட மிகச்சரியாக இதுதான் நடந்தது. அது வரி செலுத்தும் முறையை எளிதாக்கவுமில்லை, அதனால் வரி ஏய்ப்பை தடுக்க முடியவுமில்லை. அத்தியாவசியப் பண்டங்கள் உள்ளிட்ட பயன்படுத்தப்படுகின்ற பொருட்களின் இறுதி விலையில் சுமத்தப்பட்ட முழுச்சுமையையும் சாமானிய மக்கள் தாங்கிக் கொண்டிருக்கையில், எதிர்பார்த்தபடியே ஜிஎஸ்டியின் பலன்கள் யாவற்றையும் முதலாளித்துவ உடைமையாளர்கள் அபகரித்துக்கொண்டனர்.

பின்னர், மிகப்பெரும் தொழில் குடும்பங்கள் மற்றும் கார்ப்பொரேட் தொழிலதிபர்கள் வங்கிக் கடனை அடாவடித்தனமாக கட்டத்தவறியதாலும் அத்துடன் நீரவ் மோடி மற்றும் அவரைப்போன்ற மோசடியாளர்கள் மக்களின் பணத்தை ஏமாற்றிப் பறித்ததாலும் செயற்கையாக திவாலாகிப்போகும் வங்கிகளை மீட்டெடுக்க, பாடுபட்டு சம்பாதித்து வங்களில் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் மக்களின் பணத்தைச் சூறையாடும் நோக்கத்தில், 'நிதித் தீர்வு மற்றும் வைப்புத்தொகை காப்பீடு மசோதா, ***2017***' – எஃப்ஆர்டிஐ மசோதா (Financial Resolution and Deposit Insurance Bill, 2017) அறிமுகப்படுத்துவது அறிவிக்கப்பட்டது. ஆக, கடைசியில் சாமானிய மக்கள்தான் ஒவ்வொரு விஷயத்திலும் மிக மோசமாக ஒட்டவொட்ட உறிஞ்சப்பட்டும் கொள்ளையடிக்கப்பட்டும் வருகின்றனர்.

அவர்களின் வாழ்க்கை ஆபத்தில் இருக்கின்றது. அவர்களின் வாழ்வாதாரம் அழிவில் நின்றுகொண்டிருக்கின்றது. வேகமாக அதிகரித்துவரும் விலைவாசியினாலும், சம்பாதிப்பதற்கான வழிகள் வேகமாக அடைக்கப்பட்டதாலும் அவர்களின்

தொடர்ச்சி 6ம் பக்கம்

## நீரவ் மோடி—பஞ்சாப் நேஷனல் வங்கி மோசடி

# பிற்போக்கு முதலாளித்துவமே ஊழல், ஏமாற்று, மோசடிகளை உருவாக்கி, வளர்த்து, பாதுகாத்து வருகிறது

5ம் பக்கத் தொடர்ச்சி

வாங்கும் சக்தி வேகமாக வீழ்ந்துகொண்டிருக்கின்றது. பாடுபட்டு உழைத்து சம்பாதித்து வங்கிகளில் சேமித்து வைத்திருந்த பணம் நேர்மையற்ற பெரும் வணிகர்களால் அரசாங்க நிர்வாகத்தின் துணையுடன் மோசடி செய்யப்பட்டு வருகின்றது.

விளைச்சல் இல்லாமலோ அல்லது அவர் உற்பத்தி செய்த விளைபொருட்களுக்கு கட்டுபடியான விலை கிடைக்காமலோ விவசாயி வங்கியில் தான் வாங்கிய கடனை கட்டத்தவறும் பட்சத்தில், அவரது அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் ஏதுமிருந்தால் அவை பறிமுதல் செய்யப்பட்டு ஒரே நாளில் அவர் பிச்சைக்காரராக மாற்றப்படுகிறார். அந்த அவமானத்தையும் பட்டினியையும் தாங்கிக்கொள்ள முடியாமல் கவலையுற்ற அவர் உச்சகட்டமாக தற்கொலை செய்துகொள்ளுமளவிற்குக்கூட செல்கின்றார்.

முதலாவதாக, நடைமுறைச் சிக்கல்களினாலும் விதிக்கப்பட்டிருக்கும் கடுமையான நிபந்தனைகளாலும் சாதாரணக் குடிமகன் எவரும் வங்கிக்கடன் வாங்குவதை நினைத்துப்பார்க்க முடியாது. எவராவது ஒருவர் அப்படிப் கடன் வாங்கி விட்டாலும், வங்கியிலிருந்து நுகர்வுப்பொருள் கடன் வாங்கியபின் இரண்டு மாதாந்திரத் தவணைகளைக் கட்டத்தவறிவிட்டால், பல தொல்லைகளை, துன்புறுத்தல்களை அச்சுறுத்தல்களை சந்திப்பதுடன் வங்கிகள் அமர்த்தியிருக்கும் அடியாட்களின் தாக்குதலுக்கும் ஆளாகின்றார். ஆனால், எந்த அம்பானியோ, அதானியோ, மிட்டலோ, ஜிண்டாலோ, கோத்தாரியோ கடனைக் கட்டத் தவறினால், அவர்களுக்குச் சாதகமாக கடன் சலுகைகள், கடன் தள்ளுபடிகள் மற்றும் புதிய கடன்களும்கூடத் தரப்படுகின்றன. முதலாளித்துவ இந்தியாவில் நாம் காண்கின்ற காட்சி இதுதான்.

சாமானிய மக்களுக்காகவா அல்லது கொள்ளையடித்துக்கொண்டிருக்கும் பூர்ஷ்வாக்களுக்காகவா, எவரது நலனுக்காக எவர் ஆட்சி செய்கின்றனர் என்பதை அரசாங்கத்தின் மனப்பாங்கே, அணுகுமுறையே, கண்ணோட்டமே, நடவடிக்கைகளே தெளிவாகக் காட்டுகின்றது. பாஜக, காங்கிரஸ் போன்ற கட்சிகள் முதலாளித்துவத்தின் கட்டளைகளுக்கு அடிபணிந்து செயல்படுகின்ற, சலுகைகள் புரிந்து, தில்லுமுல்லு செய்து அல்லது சட்டங்களை காலில் போட்டு மிதித்து கொள்ளையடிப்பதற்கும் சூறையாடுவதற்கும் வழிவகை செய்து தருகின்ற முதலாளித்துவத்தின் வெறும் அரசியல் நிர்வாகிகள்தான். இவ்வமைப்பின் இத்தகைய கட்சிகள் பேரார்வத்துடன் கடைபிடித்து வரும் கபட நாடகத் திட்டம் இதுதான். பாஜகவின் பிரதமரால் எக்காளமிட்டு அழைக்கப்பட்ட "எளிதாக வணிகம் செய்வது" (Ease of Business) எனப்படுவது உண்மையில், முதலாளித்துவ ஏகாதிபத்தியவாதிகளாலும் அதற்குச் சேவகம் செய்பவர்களாலும் மக்கள் மீது மூர்க்கத்தனமான பொருளாதாரத் தாக்குதல்கள் தொடுப்பதற்காக அனுமதியளிக்கும் அலங்காரச் சொற்றொடரேயாகும். உண்மையில், பாஜக, காங்கிரஸ் மற்றும் பிற பூர்ஷ்வா கட்சிகள் யாவும் அத்தகைய் மோசடிகளினாலும் ஏமாற்றுகளினாலுமே உயிர்வாழ்ந்து கொண்டிருக்கின்றன.

### ஊழல், ஏமாற்று, மோசடி இவையே மாண்டுகொண்டிருக்கும் முதலாளித்துவத்தின் அம்சங்கள்

இந்த மோசடியை வெறுமனே இந்திய வங்கி அமைப்பினுள் இருக்கின்ற குறைபாடாக அல்லது ஒருசில கயவர்களின் கைவேலை என நினைத்தால், அது தவறான பார்வையாகும். முதலாளித்துவ உலகை உற்றுநோக்கிப் பார்த்தீர்களேயானால், ஊழல், ஏமாற்றுத்தனம், பொதுப்பணத்தை சூறையாடுதல், மோசடி போன்ற குற்றங்கள், பிறழ்வுகள் ஆகியன முதலாளித்துவ அமைப்பின் ஒரு பங்கும் பகுதியுமாக ஆகிவிட்டதைக் காணலாம்.

முதலாளித்துவம் தோன்றிய காலத்தில் வங்கிகள் யாவும் மக்களிடமிருக்கும் ஆதாரங்களை ஒன்று சேர்த்து பொருளாதார செயல்பாடுகளுக்கு அனுசரணையாக இருப்பவையாகப் பார்க்கப்பட்டது. பின்னர் அத்தகைய நிதியை பரந்துபட்டிருந்த தொழிற்சாலைகளுக்கும் வியாபாரத்திற்கும் திருப்பி விட்டதன் மூலம் அது திரும்பவும் அவர்கள் சேமிப்பின் மீது நியாயமான வருவாய் என்ற வடிவத்தில் சாமானிய மக்களுக்குப் பலனளித்தது. ஆனால் இன்று, முதலாளித்துவம் அதன் தவிர்க்க முடியாத சரித்திரப் போக்கின் காரணமாக, அதன் முற்போக்கான பாத்திரத்தை இழந்து, அழுகிப் போய், முற்றிலும் பிற்போக்கானதாக மாறி, வங்கிகளும் நிதி நிறுவனங்களும் அனைத்துவகை யூக வணிகம், மறைமுக கடத்தல், இது போன்ற அனைத்து ஒழுக்கக்கேடான செயல்பாடுகளுக்கும் நிதியளித்துக்கொண்டு இருக்கின்றது.

முதலாளித்துவம் இன்று, ஒட்டுமொத்த அமைப்பையும் களங்கப்படுத்தினாலொழிய அதன் ஒடுக்குமுறை, காலாவதியாகிப்போன ஆட்சியை நீட்டித்திக் கொள்ள முடியாது என்பதால், அது அனைத்து விதிகளையும், நியதிகளையும், கோட்பாடுகளையும், தார்மீகத்தையும், ஒழுக்க நெறியையும், மனசாட்சியையும், நன் மதிப்புக்களையும் காலில் போட்டு மிதித்துக்கொண்டிருக்கிறது.

அனைத்து ஊழல் செயல்பாடுகளிலும், நிதி சார்ந்த ஊழலே மிகப் பிரதானமாக இருக்கிறது. முதலாளித்துவ விதிகளின் காரணமாகவே உருவான அதிகரித்துக்கொண்டிருக்கும் தீர்க்கவியலா சந்தை நெருக்கடியினால் பாதிக்கப்பட்ட ஏகாதிபத்திய முதலாளித்துவவாதிகள் அடிப்படை, கேந்திர உற்பத்தித் தொழிற்சாலைகளில் உற்பத்தி சார்ந்த முதலீடு செய்வதின் மூலம் அவர்களின் லாபத்தை அதிகரித்திட வழியேதும் இல்லாதிருக்கின்றனர். எனவே, அவர்களின் கையிலிருக்கும் உபரி மூலதனம் யூக வணிகம், கடத்தல் மற்றும் இதுபோன்ற பிற நிழலுலக செயல்பாடுகளில் திருப்பிவிடப்பட்டுக் கொண்டு வருகிறது.

உண்மையில், ஒட்டுமொத்த முதலாளித்துவப் பொருளாதாரமும் சூதாட்டக்காரர்களின் கூடாரமாக மாறிவிட்டது. பெருமளவில் ஊக வணிகத்தை அதிகரித்திடவும் தனிநபர்களின் பணப்பெட்டியை நிரப்பிக்கொள்ளவும் அனுமதிக்கக்கூடிய, அனுமதிக்க முடியாத பல்வேறு வழிகள் மூலம் கூடுதல் நிதி திரட்டிக்கொள்ளப்படுகிறது. உண்மையில் இப்போது வங்கிகளின் பிரதான வேலை, அவைகளுக்கு இருக்கும் தார்மீகப் பொறுப்பை மீறி அத்தகைய நிதியை வழங்குவதாக இருக்கிறது. உண்மையில் இப்போது வங்கிகள் பெரும் தொழிலதிபர்கள், போலி வணிகர்கள், ஏமாற்று வியாபாரிகள், நேர்மையற்ற அதிகார வர்க்கம், பேராசை பிடித்த ஆளும் கட்சித் தலைவர்களின் ஊழல் தொடர்பின் தொங்குதசைகளாக ஆகிவிட்டன. இதற்கான அப்பட்டமான உதாரணம், 2008இல் அமெரிக்காவில் வெடித்துக் கிளம்பிய உலக முதலாளித்துவப் பொருளாதாரத்தையே ஆட்டம்காணவைத்த சப்பிரைம் நெருக்கடியாகும். (Sub-prime Crisis)

வங்கி நிதியை சூறையாடும் பொருட்டு, இத்தகைய ஊழல் தொடர்பு கொண்டவர்கள் அவர்களின் எடுபிடி அரசாங்கத்தின் வழிகாட்டலுடன் அகமகிழ்ச்சியுடன் விதிகளை மீறுகின்றனர். ஆளும் பூர்ஷ்வாக்களால் பணரீதியிலும் அரசியல் ரீதியிலும் வளர்த்தெடுக்கப்பட்டு ஆட்சியதிகாரத்தில் வைத்து அழகுபார்க்கப்பட்ட ஆளும் கட்சிகள், அவர்களின் ஆசான்களுக்கு தண்டனையிலிருந்து பாதுகாப்பளித்து, எவ்விதக் கவலையுமின்றி பொதுப்பணத்தை களவாட அனுமதிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆக, ஆளும் பூர்ஷ்வா கட்சிகள், அது இந்தியாவிலுள்ள பாஜக அல்லது காங்கிரஸ் என எதுவாக இருந்தாலும், அல்லது அமெரிக்காவிலுள்ள ஜனநாயக அல்லது குடியரசுக் கட்சியாக இருந்தாலும் இத்தகைய மோசடிகளுக்கு மௌனத்துடன் உடந்தையாக இருக்கிறது. இத்தகைய ஏமாற்று, மோசடி விவகாரம் வெளியே கசிந்து மக்களிடம் கொந்தளிப்பு ஏற்படுகையில் மட்டுமே, சரியான நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்ற பாவனையுடன் ஒப்பனையான திடீர் சோதனைகளும், பெயரளவிலான கைதுகளும், குற்றவாளிகளுக்கெதிரான "கடும் நடவடிக்கை" எடுக்கப்படும் என்ற புளித்துப்போன போலியான வாக்குறுதிகள் தருவதும் திட்டமிட்டு நடைபெறுகின்றன. ஆனால், சலசலப்பு குறையத் துவங்கியவுடன், அவர்களின் தீவிர நடவடிக்கை மறைந்து போய்விடும். குற்றவாளிகள் காயமின்றி தப்பிப்பது மட்டுமின்றி, களவாடப்பட்ட மக்கள் பணத்தை பரிசாகவும் பெற்றிடுவார்கள்.

முதலாளித்துவ அரசு அவர்களைப் பாதுகாக்கின்றது. இத்தகைய மோசடிக்காரர்கள், கடத்தல்காரர்களிடமிருந்து தேர்தல் நிதியைப் பெற்றுக் கொண்டு, அவர்களின் 'தயவில்' வாழும் ஆளும் பூர்ஷ்வா கட்சிகள், முடிந்த அனைத்து வழிகளிலும் அவர்களைப் பாதுகாக்கின்றனர். இத்தகைய நோயை, பிறழ்வுகளை, ஊழல்களை, குற்றங்களை முதலாளித்துவமே உருவாக்குகிறது, முதலாளித்துவமே பேணி வளர்க்கிறது, முதலாளித்துவமே ஊக்குவிக்கிறது, முதலாளித்துவமே பாதுகாத்து மூடி மறைக்கிறது.

### எது இத்தகைய நோய்களைத் தடுக்கும்?

இத்தகைய நிலைமையில், பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் சாமானிய மக்கள் வேறு வழியின்றி எத்தனை நாட்கள் பொறுத்திருப்பார்கள்? இத்தகைய மோசடிகளையும் ஏமாற்றுத்தனத்தையும் தொடர்ச்சியாக நடந்திட அனுமதிக்கலாமா? இல்லை. அப்படி அனுமதிக்க முடியாது. சரியான புரிதலின், சரியான அணுகுமுறையின் அடிப்படையில் மக்கள் இப்பிரச்சினையை எதிர்கொள்ள வேண்டும். இதனை அவர்கள் செய்தார்களேயானால், தொடர்ச்சியாக திட்டமிட்டு நடைபெறும் கொள்ளையை, சூறையாடலை, அதனைத்தொடர்ந்த அவர்கள் மீதான காட்டுமிராண்டித்தன பொருளாதாரத் தாக்குதலை ஓரளவிற்கு தடுக்க முடியும்.

விடுதலைப் போராட்ட நாட்களிலும் விடுதலைக்குப் பிந்தைய குறிப்பிடத்தக்க காலகட்டத்திலும் இடதுசாரி கண்ணோட்டம் மேலோங்கியிருந்த நிலையில் முழுவீச்சில் சக்திவாய்ந்த மக்கள் இயக்கங்கள் நடைபெற்றுக்கொண்டிருந்த நேரத்தில், மக்கள் மீதான இது போன்ற புதிய புதிய வடிவத்திலான தாக்குதல் காணப்படவில்லை. ஆனால் இன்று, அரசியல் அதிகாரத்திற்காக, இப்போது வெறிபிடித்து அலையும் போலி மார்க்சிசவாதிகளின், போலி இடதுசாரிகளின் சமரசக் கொள்கைகளால், மக்களின் எதிர்ப் போராட்டங்களும் தடுப்புப்போராட்டங்களும் பெருமளவில் வலுவிழந்து இருக்கையில், ஆளும் முதலாளித்துவ வர்க்கத்தினால், அதற்குச் சேவகம் புரிபவர்களால் ஒன்றன்பின் ஒன்றான கடுமையான பொருளாதாரத் தாக்குதல்கள் மக்கள் மீது தொடுக்கப்படுகிறது.

மக்களின் அமைப்புரீதியிலான எதிர்ப்புப் போராட்டங்களும் தடைப்போராட்டங்களும் எந்த அளவிற்கு தளர்வடைகிறதோ, அந்த அளவிற்கு முதலாளித்துவ ஆட்சியாளர்களும், அவர்களின் அடியாட்களும் அவர்களுக்கு சேவகம் செய்து வரும் குண்டர்களும், குற்றவாளிகளும் கொள்ளைக் காரர்களும், தடையின்றி துணிச்சலுடன் செயல் படுவார்கள்.

எனவே, இந்நோய்களைத் தடுத்து நிறுத்திட வேண்டுமாயின், மக்கள் இத்தகைய உணர்வின் அடிப்படையில், சரியான தலைமையின் கீழ், நேர்மையுடன் தங்களை ஒன்றிணைத்துகொண்டு, அவசியமான, அலையலையான, சக்திவாய்ந்த போராட்டங்களை மீண்டும் முன்னெடுத்தாக வேண்டும் ■



புதுச்சேரியில் இரு சக்கர வாகன நிறுத்தத்திற்கு கட்டணம் உயர்த்தப்பட்டதைக் கண்டித்து எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) ஏப்ரல் 01, 2018 அன்று நடத்திய ஆர்ப்பாட்டம்

## மத்திய பட்ஜெட் 2018–19

# காப்பீட்டு உச்சவரம்பை உயர்த்துவதன்மூலம் அடிப்படை மருத்துவ சேவையை மேம்படுத்த முடியாது

2ம் பக்கத் தொடர்ச்சி

பிரதமரும் இதையே திரும்பத் திரும்ப கூறிவருகின்றனர். இவர்கள் கொண்டுவரும் இத்திட்டங்கள் உண்மையிலேயே நாட்டின் பரிதாபத்திற்குரிய மருத்துவ சேவையில் சிறிதளவேனும் நன்மாற்றத்தைக் கொண்டு வருமா என்று பார்ப்போம்.

இவர்கள் கூறும் இத்திட்டம் உண்மையில் ஒரு மருத்துவக் காப்பீடு திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ் இடைநிலை மருத்துவ கவனிப்பிற்காகவும் (மாவட்ட மருத்துவமனைகள் மற்றும் சமூக சுகாதார மையங்கள் ஆகியவற்றில்) கடைநிலை மருத்துவ கவனிப்பிற்காகவும் (பொது மருத்துவமனைகள், அதி சிறப்பு மருத்துவமனைகள் போன்றவற்றில் உள்நோயாளியாக அனுமதித்து அளிக்கப்படும் சிகிச்சைகள்) பத்து கோடி குடும்பங்களுக்கு ஆண்டொன்றிற்கு ஐந்து லட்சம் ரூபாய் வரையில் மருத்துவக் காப்பீடு வழங்குகின்ற திட்டமாகும். உண்மையில் இத்திட்டம் 2016ம் ஆண்டிலேயே அறிவிக்கப்பட்டுவிட்டது, தற்போது ஒரே வித்தியாசம் என்னவெனில் காப்பீடு வரம்பு 1.5 லட்சம் ரூபாயிலிருந்து 5 லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டிருப்பது மட்டுமேயாகும். ஆனால் அறிவிக்கப்பட்டு இரண்டாண்டுகளாகியும் ஏன் அமல்படுத்தப்படவில்லை என்பதற்கான காரணத்தை நிதியமைச்சர் தெரிவிக்கவில்லை. மருத்துவக் காப்பீடு திட்டம் என்பது இந்தியாவிற்கு புதிதல்ல. ராஷ்ட்ரீய சுவஸ்த்ய பிமா யோஜ்னா (ஆர்எஸ்பிஒய்) என்ற மத்திய அரசாங்கத்தின் திட்டமும் பல்வேறு மாநில அரசாங்கங்களின் திட்டங்களும் பல ஆண்டுகளாக நடைமுறையில் இருந்து வருகின்றன. ஆனால், உறுதியளிக்கப்பட்ட பலன்கள் மிக அபூர்வமாகவே உரியவர்களை சென்றடைந்திருக்கின்றன என்பதுதான் இதுவரை கிடைக்கப்பெற்ற சான்றுகளிலிருந்து தெரிகிறது. பகுதியளவு பலன்கள்கூட அரிதாகவே சென்றடைகின்றன. இந்த ஆர்எஸ்பிஒய் திட்டம் உள்நோயாளிகளுக்கானதாகும். ஆனால், இந்த ஆர்எஸ்பிஒய்–ல் பட்டியலிடப்பட்டுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள் நோயாளிகளை அனுமதிப்பதற்கான வசதிகளைக் கொண்டிருக்கவில்லை. மேலும், நடைமுறையில் உள்ள பிற மருத்துவ காப்பீடு திட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் நிதியில் பாதியளவிற்குக் கூட கடந்த ஆண்டில் செலவிடப்படவில்லை.

தற்போது நடப்பிலுள்ள அரசாங்க மருத்துவக் காப்பீடு திட்டங்கள் நிதிப் பாதுகாப்பு வழங்கத் தவறுவதாக எண்ணற்ற ஆய்வுகளும் தேசிய மாதிரி சர்வேக்களும் கூறுகின்றன. நமது நாட்டில் ஆரம்ப சுகாதார அமைப்பு நிலைகுலைந்துள்ளது என்பது அனைவரும் அறிந்ததே. சிக்கலான பிரச்சினைகளான மருத்துவர்கள் வராமற்போவது, உட்கட்டமைப்பு வசதியின்மை, மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவ உபகரணங்கள், மருந்துகள் போதுமான அளவிற்கு இல்லாதது மட்டுமின்றி தண்ணீர் வசதியும் மின்சார வசதியும் கூட இல்லாத நிலையே பல ஆரம்ப சுகாதார நிலையங்களில் நிலவுகிறது. இத்தகைய சிக்கலான பிரச்சினைகளை தீர்ப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை. 31.03.2017 தேதிப்படி 11% ஆரம்ப சுகாதார நிலையங்கள் மட்டுமே இந்திய பொது சுகாதார தரத்தை எட்டியுள்ளதாக சுகாதார அமைச்சகம் வெளியிட்டுள்ள புள்ளி விவரங்கள் கூறுகிறது. இந்நிலையில், சுகாதார மற்றும் நலவாழ்வு மையங்களாக துணை சுகாதார நிலையங்கள் திகழவேண்டுமானால் இந்த அடிப்படை வசதிகளும் மனிதவளமும் இருக்க வேண்டும் என்பது ஒருவரின் குறைந்தபட்ச எதிர்பார்ப்பாகவே அமையும். அடித்தளமான ஆரம்ப சுகாதார கவனிப்பை வலுப்படுத்தினால்தான் கடைநிலை மருத்துவ கவனிப்பை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் வெற்றியடையும். ஆனால், இந்த பிரச்சினைகளில்லெல்லாம் இந்த பட்ஜெட் கவனம் செலுத்தவில்லை. அதற்காக நிதியும் ஒதுக்கவில்லை. எய்ம்ஸ் (AIIMS) போன்ற மருத்துவமனைகளை நிறுவுவது பற்றித்தான் அது பேசுகிறது.

இரண்டாவதாக, சுகாதார சேவை மற்றும் மருந்துத் துறைகளை அரசாங்கம் திட்டமிட்ட வகையில் தனியாருக்கு தாரை வார்த்து வருகிறது. மக்களை ஒட்ட உறிஞ்சி இத்தனியார் நிறுவனங்கள் வியாபார ரீதியில் இத்துறைகளை நடத்திவருகின்றன. சுகாதார சேவையை மேம்படுத்துதல் பற்றி எப்போதெல்லாம் இந்த அரசாங்கம் பேசுகிறதோ அப்போதெல்லாம் தனியார் துறைகள் மூலமாக சேவையை வழங்குவது பற்றித்தான் பேசியதே தவிர பொது சுகாதார முறையை பலப்படுத்துவதைப்பற்றி அது பேசியதே கிடையாது. இத்தகைய சூழ்நிலையில், மருத்துவக் காப்பீடு திட்டம் பற்றி வெறுமனே அறிவிப்பதில் ஏதேனும் அர்த்தமிருக்கிறதா? அனைவருக்கும் மருத்துவம் என்ற இலக்கை அடைவதற்கு தனியார் துறையை நம்புவதென்பது, அதாவது அரசு செலவிலிருந்து சுகாதாரம் என்ற சுமையை இறக்கிவைத்து மருத்துவ காப்பீட்டின் அடிப்படையில் பொதுச் சுகாதாரத்தை அடைய முயல்வதென்பது, மருத்துவ சேவைக்கான ஒட்டுமொத்த செலவுகளை எகிறச் செய்து, பலருக்கு மருத்துவ சேவை கிடைக்காமற் போகச் செய்து, முறையான, சரியான மருத்துவ கவனிப்பு வழங்கப்படுவதையும் மருத்துவ அறம்சார் நடைமுறைகளையும் குலைப்பதில்தான் முடிகிறது என்பதுதான் இந்தியா உட்பட உலகெங்கும் கிடைக்கின்ற அனுபவமாக உள்ளது. இவை மட்டுமின்றி, இந்தியாவில் தனியார் மருத்துவமனைகளில் தேவையற்ற, காரணமே இல்லாத மருத்துவ சேவைக்கும் மருந்துகளுக்கும், சில சமயம் அளிக்கப்படாத மருத்துவ சேவைக்கும் மருந்துகளுக்கும்கூட கட்டணம் வசூலிக்கப்பட்டு வெறித்தனமாக லாப வேட்டை நடத்தப்படுவதாக பரவலாக செய்திகள் வருவதையும் நாம் கவனிக்கவேண்டும். மருத்துவத்திற்காக ஒருவரால் செலவிட முடிகிறதா இல்லையா என்பதையெல்லாம் கணக்கிற்கொள்ளாமல் அனைவருக்கும் மருத்துவ சேவை வழங்கக்கூடிய பிரமாண்டமான பொது சுகாதார உட்கட்டமைப்பை கட்டியமைப்பதற்கு பதிலாக, பெரும்பாலும் தனியாரால் வழங்கப்படும் விலை அதிகமுள்ள அதி நவீன மருத்துவ வியாபாரமாகத்தான் இந்தியாவில் மருத்துவ சேவை காட்சியளிக்கிறது. மிகப்பெரிய ஜனநாயக நாடு என்று தன்னைக்கூறிக் கொள்கின்ற இந்தியாவில் மருத்துவம் என்பது பணக்காரர்களுக்கும் வசதி படைத்தவர்களுக்கும் மட்டுமே என்றும் சாமானிய பொது மக்கள் சரியான மருத்துவ கவனிப்பின்றி சாகவேண்டும் என்பதுதான் விதி என்றும் இந்நாட்டு மக்கள் நினைப்பதில் தவறேயில்லை.

சுகாதார நலவாழ்வு பாதுகாப்பு குறித்து இவ்வாண்டு பட்ஜெட்டில் நிதியமைச்சர் ஆற்றிய உரையால் புளகாங்கிதமடைந்தவர்கள் புள்ளிவிவரங்

தொடர்ச்சி 8ம் பக்கம்

# மார்ச் 8: சர்வதேச மகளிர் தினம் அனுஷ்டிப்பு

## அகில இந்திய மகளிர் கலாச்சார சங்கம்

சர்வதேச மகளிர் தினத்தை எப்போதும் போலவே இவ்வாண்டும் உரிய முக்கியத்துவத்துடனும் உத்வேகத்துடனும் அகில இந்திய மகளிர் கலாச்சார சங்கம் (AIMSS) அனுஷ்டித்தது.

ஆபாசம், மதுபானங்கள் ஆகியவற்றை முற்றிலும் தடை செய்!

பெண்கள் மீதான குற்றங்களைத் தடுத்து நிறுத்தி பாதுகாப்பை உறுதிப்படுத்து!

மதவாதம், குருட்டுத்தனங்களுக்கு புத்துயிரூட்டும் கெடு நோக்கத்திற்கு எதிராக போராடுவோம்!

ஆகிய முழக்கங்களை நாடு முழுவதும் எடுத்துச் சென்று இவ்வாண்டு பிரச்சாரம் நடத்தியது. தமிழ்நாட்டிலும் இவ்வமைப்பு செயல்படுகின்ற அனைத்து மாவட்டங்களிலும் இப்பிரச்சாரம் எடுத்துச்செல்லப்பட்டு பல்வேறு குழுக்கூட்டங்கள், விவாதங்கள், கலந்துரையாடல்கள், அரங்கக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

***சென்னையில்*** மேற்கு மாம்பலம், ஓட்டேரி, வியாசர்பாடி, அம்பத்தூர், செங்குன்றம் ஆகிய பகுதிகளில் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

***நெய்வேலியில்*** மார்ச் 11ம் தேதியன்று இவ்வமைப்பின் சார்பாக சர்வதேச பெண்கள் தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

***மதுரை–திண்டுக்கல்–தேனி*** மாவட்டங்களில் மாங்குளம், முனியாண்டிபுரம், கணவாய்ப்பட்டி, தேனி ஆகிய இடங்களில் கூட்டங்கள் நடத்தப்பட்டன ■




சென்னையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர் சுமதி உரையாற்றுகிறார்



மதுரையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர் ஹில்டா மேரி உரையாற்றுகிறார்




நெய்வேலியில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர் சந்திரா உரையாற்றுகிறார்



தேனியில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்ட பெண்கள்

## மத்திய பட்ஜெட் 2018–19

# கல்வியில் தனியார்மயம்–வியாபாரமயத்தை ஊக்கப்படுத்துவது கல்வித் தரத்தை மேம்படுத்தவே என பறைசாற்றுகிறார்கள்

7ம் பக்கத் தொடர்ச்சி

களைப் பார்த்தால் நிலைகுலைந்து போவர். மருத்துவத் துறைக்கு 2017–18ம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடு ரூ53,198 கோடியாகும். இவ்வாண்டுக்கான நிதி ஒதுக்கீடு ரூ54,667 கோடியாகும். ஏறக்குறைய சென்ற ஆண்டு ஒதுக்கப்பட்ட அதே அளவு நிதிதான் இவ்வாண்டும் ஒதுக்கப்பட்டுள்ளது. எந்தவொரு நல்லெண்ண மதிப்பீடும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மருத்துவத்திற்கான பட்ஜெட் 2.5% முதல் 3% வரை இருக்கவேண்டும் என்றே கூறும். ஆனால், இதற்கு மாறாக, 1% முதல் 1.2%ற்குள்ளாகவே மருத்துவ பட்ஜெட் இருக்கிறது.

கொடுமையான விஷயம் என்னவெனில் மருத்துவத்தை சாக்கிட்டு புதிய வரி இந்த பட்ஜெட்டில் போடப்பட்டுள்ளது. மருத்துவம், கல்வி ஆகிய இரண்டையும் சேர்த்து 4% செஸ் வரி விதிக்கப்படுகிறது. இதனால் அரசாங்கத்திற்கு கூடுதலாக ரூ11,000 கோடி வருவாய் கிடைக்கும் என்று மதிப்பிடப்படுகிறது. இதில் வெறும் கால்பகுதி தொகையை மருத்துவத்துறைக்கு ஒதுக்குவதானால் கூட கடந்த ஆண்டு நிதி ஒதுக்கீட்டை விட இவ்வாண்டு கூடுதலாக ரூ2750 கோடி ஒதுக்கவேண்டும். ஆனால், ஒதுக்கப்பட்டிருக்கும் கூடுதல் நிதியோ வெறும் ரூ1250 கோடி மட்டுமே. ஆனால், மருத்துவம், கழிப்பிட சுகாதாரம், குடிநீர் ஆகியவற்றுக்கான ஒட்டுமொத்த ஒதுக்கீடு ரூ77,305 கோடியிலிருந்து ரூ77,024 கோடியாக குறைந்துவிட்டது. அதாவது மருத்துவ பட்ஜெட் 2.8% அதிகரித்தபோதிலும் குடிநீர், கழிப்பிட வசதிகளுக்கான பட்ஜெட் குறைக்கப்பட்டதால் ஒட்டுமொத்தத்தில் 0.5% நிதி குறைந்துள்ளது. ஆனால் இந்த கள்ளத்தனத்தை வெளியே சொல்லாமல் மறைத்துவிட்டனர்.

அதேபோல், 10 கோடி குடும்பங்களுக்கு தலா 5 லட்சம் ரூபாய் மருத்துவ காப்பீடு வழங்கப்படும் என்ற உறுதிமொழி கேட்பதற்கு நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால், இதற்கான நிதி ஒதுக்கீடு எதுவும் செய்யப்படவில்லை. நிதி எங்கிருந்து திரட்டப்படவிருக்கிறது என்றும் குறிப்பிடப்படவில்லை. அரசு செயல்படுத்தும் மருத்துவக் காப்பீடு திட்டங்களில் ஒரு குடும்பத்திற்கான சராசரி ப்ரீமியம் தொகை ரூ3000 ஆகும். இதன்படி பார்த்தால், தேசிய மருத்துவ கொள்கை திட்டத்திற்காக குறைந்தபட்சம் ரூ30,000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யவேண்டும். ஆனால், செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடோ வெறுமனே ரூ2000 கோடி மட்டுமே. இங்கேதான் கபடத்தனம் மறைந்துள்ளது. பெரிதாக பேசப்பட்ட பயிர்க்காப்பீடு திட்டம் காப்பீடு நிறுவனங்களுக்கு, குறிப்பாக தனியார் காப்பீடு நிறுவனங்களுக்கு கிடைத்த மிகப் பெரிய வரப்பிரசாதமானது அனைவரும் அறிந்ததே. தனியார் காப்பீடு நிறுவனங்கள் கட்டப்பட்ட ப்ரீமியம் தொகையில் 97%ஐ கபளீகரம் செய்துவிட்டன. விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட காப்பீடு வெறும் 6.61% மட்டுமே ஆகும். காப்பீடு தொகை வழங்குவதில் பெருமளவு ஊழல் முறைகேடுகள் நிகழ்ந்துள்ளதாக நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. பயிர்க்காப்பீட்டில் நிலைமை இவ்வாறிருக்க, மருத்துவத்துறையில் காப்பீடு நிறுவனங்கள் வழங்கும் தனிநபர் நோய் சிகிச்சைக்கான மெடி க்ளைம் போன்ற காப்பீடு பாலிசிக்களில் தனியார் மருத்துவமனைகள் எவ்வாறெல்லாம் சிகிச்சை செலவினங்களை வேண்டுமென்றே அதிகரித்துக்காட்டி க்ளைம் செய்கின்றன என்பதை இதோடு தொடர்பும் அனுபவமும் கொண்டவர்கள் நன்கறிவர். இத்தகைய சூழ்நிலையில், பொது சுகாதார சேவைகள் கிடைப்பதை உறுதிப்படுத்தி அவ்வமைப்பை பலப்படுத்துவதற்கு பதிலாக காப்பீடு அடிப்படையிலான மருத்துவ சேவையின்பால் சாய்வதென்பது மருத்துவத்திற்காக குறைவான நிதி ஒதுக்கீடு செய்வதற்கு அரசாங்கத்தை அனுமதிப்பதாகவும் அதே சமயம் ஏழைகளின் நோய்நொடிகளை வியாபாரப் பொருளாக்கி தனியார் மருத்துவமனைகளும் தனியார் காப்பீடு நிறுவனங்களும் பொதுப்பணத்தைக் கொள்ளையடித்து, கொள்ளை லாபம் ஈட்டுவதற்கு அனுமதிப்பதாகவும் அமையும் என்ற முடிவிற்கே நாம் வரவேண்டியுள்ளது.

### கல்வி

நீண்டகாலமாக அரசாங்கம் கடைபிடித்துவரும் கொள்கையான கல்வியை மேன்மேலும் அதிகமாக தனியார்மயம், வியாபாரமயமாக்குவது என்ற கொள்கைக்கேற்ப கல்வித்துறைக்கு ஒதுக்கும் நிதியை அரசாங்கம் தொடர்ந்து குறைத்துக்கொண்டே வருகிறது. ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் கல்விக்கான ஒதுக்கீடு 0.49%லிருந்து 0.45%மாக குறைக்கப்பட்டுவிட்டது. இதுவரை நடைமுறையில் இருந்த 3% கல்வி செஸ் வரிக்கு பதிலாக மேலே குறிப்பிட்டதுபோல் கல்வி, மருத்துவம் இரண்டிற்குமான செஸ் வரியாக 4% வரி விதிக்கப்படுகிறது. இதில் இவ்விரு துறைக்கும் சரிபாதியாக பங்கிடப்படுமானால் தற்போது கல்விக்கு கிடைக்கும் 3% வரி வருவாய்க்கு பதிலாக 2% மட்டுமே கிடைக்கும். மிக முக்கியமாக, இந்த கல்வி செஸ் வரித்தொகை எங்கே எப்போது எவ்வாறு செலவிடப்படுகிறது என்ற விவரங்கள் யாருக்கும் தெரியாது. ஆனால், மக்களை ஏமாற்றுவதற்காக கல்விக்காக கடந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதி ரூ81,869 கோடியிலிருந்து ரூ85,010 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது என பிரச்சாரம் செய்யப்படுகிறது. எனவே, கல்விக்கான நிதி ஒதுக்கீடு 3.69% அதிகரிக்கப்பட்டுள்ளதாக நம்பவைக்கப்படுகிறது. ஆனால், செஸ் வரியிலிருந்து குறைவாக கிடைக்கும் 1% தொகையை கழித்துவிட்டால், அதிகரிக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு வெறும் 0.46%மாக மட்டுமே இருக்கும். ஒட்டுமொத்த பட்ஜெட்டில் கல்விக்கான ஒதுக்கீடு 10%ஆக அதிகரிக்கவேண்டும் என்பது கல்வியை நேசிக்கும் மக்களுடைய கோரிக்கையாகும். ஆனால் ஏற்கனவே வெறும் 3.69%மாக இருந்த கல்விக்கான நிதி ஒதுக்கீடு 3.48% என குறைக்கப்பட்டுவிட்டது. பல்கலைக்கழக மானியக்குழு மற்றும் பிற கல்வித்துறைகளுக்கான மானிய நிதி ஒதுக்கீடுகள் சரேலென குறைக்கப்பட்டுள்ளன. பட்ஜெட் தாக்கலுக்கு முதல் நாள் வெளியிடப்பட்ட பொருளாதார சர்வேயில் சமூக நலன் துறைகளில், கல்வி உட்பட, பெரிய அளவில் செலவினம் செய்வதற்கு போதிய நிதி ஆதாரங்கள் அரசாங்கத்திடம் இல்லை என்று குட்டு உடைக்கப்பட்டுவிட்டது. எனவே, கல்விக்காக எவ்வளவு அதிகமாக செய்கிறோம் என்ற அரசாங்கத்தின் தம்பட்டம் செல்லுபடியாகவில்லை.

கல்வித் துறையில் முன்பருவ மழலைக்கல்வி முதல் உயர்நிலை பள்ளிக்கல்வி வரை பல்வேறு நிலைகளை தனித்தனியாக கையாளாமல் பள்ளிக் கல்வி முழுவதையும் ஒன்றாக ஒட்டுமொத்தமாக கையாளவேண்டும் என இந்த பட்ஜெட் முன்மொழிகிறது. இதன் பொருள் யாதெனில், பல்வேறு பள்ளிக் கல்வித் திட்டங்களான சர்வ சிக்ஷா அபியான் (அனைவருக்கும் கல்வித்திட்டம்) ராஷ்ட்ரிய மத்யமிக் சிக்ஷா அபியான் (தேசிய இடைநிலைக் கல்வித் திட்டம்) போன்ற பல்வேறு திட்டங்களை ஒன்றிணைப்பதாகும். இதன் மூலம் பள்ளிக்கல்வித் துறையில் எஞ்சியிருக்கின்ற கல்விசார் சுயாட்சிக்கு மேலும் புதைகுழி தோண்டிவிட்டு மத்திய அரசாங்க அளவில் மையப்படுத்தப்பட்ட கட்டுப்பாட்டை மேலும் கெட்டிப்படுத்தப்படவுள்ளது. அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளின் தரம் தொடர்ந்து வீழ்ந்து வருவதை கட்டுப்படுத்துவதற்கு என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன என்பது பற்றி பட்ஜெட்டில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. இவ்வாறு தரம் வீழ்ந்துவருவதற்குக் காரணம் அரசாங்கம் கடைபிடித்துவரும் பல்வேறு கல்வி–விரோத கொள்கைகளும் பரிதாப நிலையில் உள்ள உட்கட்டமைப்பு வசதிகளுமேயாகும். போதிய அளவில் தகுதிவாய்ந்த ஆசிரியர்கள்கூட பல பள்ளிகளில் கிடையாது. இவையெல்லாம் எதைக் காட்டுகின்றன? சற்றேனும் தரமான கல்வி பயில வேண்டும் என்ற எண்ணத்தில் நல்ல பள்ளிகளை பலர் நாடுவதால் அதிகரிக்கும் மாணவர்களை கசக்கிப்பிழிந்து தம்மிஷ்டத்திற்கு கட்டணங்கள் நிர்ணயித்து கொள்ளையடிப்பதற்கு தனியார் பள்ளிகளை அனுமதிப்பதற்காகவே திட்டமிட்ட அரசு பள்ளிகளின் நிலைமையும் தரமும் சீரழிக்கப்படுகின்றன. பெற்ற கல்வியின் தரம் மற்றும் தரமான கல்வி பெறுவதற்கான பொருளாதார நிலை ஆகியவற்றின் அடிப்படையில் மாணவர்களை பாகுபாடு செய்வதும் கண்டுகொள்ளாமல் விடப்படுகிறது. மாற்றியமைக்கப்பட்ட உயர்கல்வி நிதியளிப்பு முகமையின் (இது ஒரு வங்கியல்லாத நிதி நிறுவனமாகும்) மூலம் மத்திய அரசின் நிதியில் நடத்தப்படும் சில உயர்கல்வி நிலையங்களுக்கு 10 ஆண்டுகாலத்திற்குள் திருப்பிச்செலுத்தவேண்டிய கடன் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு கடன்பெறும் உயர்கல்வி நிறுவனங்கள் அதனை அடைப்பதற்கு இயல்பாக கட்டண உயர்வைத்தான் மேற்கொள்ளும். இதனால், உயர்கல்வி என்பது வசதிபடைத்த குடும்பங்களைச் சேர்ந்த ஒரு சில மாணவர்களுக்கு மட்டுமே என்ற நிலை ஏற்படும். இது, உயர்கல்வியை மறுக்கும் நடவடிக்கையன்றி வேறென்ன?

மற்றொரு அம்சம் பள்ளிக்குழந்தைகளுக்கான மதிய உணவுத் திட்டமாகும். பணவீக்கம் தொடர்ந்து அதிகரித்துக்கொண்டிருக்கும் நிலையில்கூட இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு அதிகரிக்கப்படவில்லை. ஒரு குழந்தைக்கு ஒரு நாளைக்கான மதியஉணவுக்கு அரசாங்கம் வெறும் ரூ4.13 மட்டுமே செலவிடுகிறது என்று கணக்குகள் சொல்கின்றன. மாமிசமற்ற உணவிலிருந்து கிடைக்கும் புரதச் சத்துக்கும் மேலாக வாரத்திற்கு ஒரு குழந்தைக்கு இரண்டு முட்டைகள் வழங்கப்படவேண்டும் என்று சட்டம் சொல்கிறது. ஆனால் இந்த குறைவான நிதி ஒதுக்கீட்டில் போதுமான உணவு வகைகள் எவ்வாறு வழங்கப்படும் என்பது தெரியவில்லை. ஏழைக் குழந்தைகள் மீது அரசாங்கம் காட்டுகின்ற லட்சணம் இதுதான்.

### வேலைவாய்ப்பின்மையும் வேலை இழப்பும்

பாதிக்கும் அதிகமான இந்தியர்கள் வேலையின்றி இருப்பதாக இரண்டாண்டுகளுக்கு முன்பு இந்திய ஜனாதிபதி கூறினார். கடந்த ஐந்தாண்டுகளில் இல்லாத அளவிற்கு வேலையின்மை என்பது உச்சியை தொட்டிருப்பதாக நாட்டில் நிலவும் வேலை வாய்ப்பு சூழ்நிலை பற்றிய ஐந்தாவது சர்வே கூறுகிறது. எந்த அளவிற்கு வேலைவாய்ப்பின்மை பெருகியுள்ளது என்பதற்கு ஒரு உதாரணம் வருமாறு. தமிழ்நாடு அரசு அலுவலகங்களில் காலியாக உள்ள சுமார் 9500 இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் பணியிடங்களை நிரப்புவதற்காக டிஎன்பிஎஸ்சி நடத்திய தேர்வுக்காக பெறப்பட்ட சுமார் 20 லட்சம் விண்ணப்பங்களில் 992 பேர் முனைவர் பட்டம் பெற்றவர்களாகவும் 23000 பேர் எம்ஃபில் பட்டதாரிகளாகவும் 2.5 லட்சம் முதுநிலை பட்டதாரிகளும் 8 லட்சம் பட்டதாரிகளும் விண்ணப்பித்திருந்தனர். உத்தரப்பிரதேசத்தில் 368 கடைநிலை ஊழியர் (பியூன்) பணியிடங்களுக்கு முனைவர் பட்டம் பெற்றவர்கள், முதுநிலை பட்டதாரிகள் பலர் உட்பட 23 லட்சம் விண்ணப்பங்கள் குவிந்த செய்தியை சில ஆண்டுகளுக்கு முன்பு படித்தோம். ஆண்டுக்கு 2 கோடி வேலை வாய்ப்புகள் வழங்குவோம் என்று பாஜக தேர்தல் வாக்குறுதி அளித்தது. ஆனால், உண்மையில் 3 லட்சம் வேலை வாய்ப்புகள்கூட உருவாக்கப்படவில்லை. இருக்கின்ற வேலையையும் இழந்தவர்களைக் கணக்கிற்கொண்டால் நிகர வேலைவாய்ப்பு உருவாக்கம் மைனசில் போகும். புதிய பணியிடங்கள் அநேகமாக உருவாக்கப்படுவதில்லை. ஓய்வு பெறுவதால் காலியாகும் பணியிடங்கள் அழிக்கப்படுகின்றன. ரயில்வேயில் மட்டும் 2,20,000 பணியிடங்கள் காலியாக உள்ளன. இதில் 1,41,000 பணியிடங்கள் ரயில்வே பாதுகாப்பு பணிகள் சம்பந்தப்பட்டவையாகும். வேலைவாய்ப்புகள் உருவாக்குவதில் தோல்வியடைந்துவிட்ட பாஜகவினர் அனைவருக்கும் வேலை கொடுப்பதென்பது சாத்தியமில்லாத விஷயம் என்று வெட்கமின்றி கூறுகின்றனர். இதே கருத்தை எதிரொலிக்கும் விதமாக “வேலை தேடுபவர்கள் என்ற நிலைக்கு பதிலாக வேலை கொடுப்பவர்கள்” என்ற நிலைக்கு உயர வேண்டும் என்று வேலையின்றி தவிக்கும் இளைஞர்களைப் பார்த்து பிரதமர் கிண்டலடித்தார். அழுகிப் போய் மரணத்தருவாயில் இருக்கின்ற முதலாளித்துவத்தால் வேலை வாய்ப்புகளை உருவாக்க முடியாது என்பதை நாம் அறிவோம். ஆனாலும், ஒரு அரசாங்கம் உறுதி பூண்டால் தனது கட்டுப்பாட்டின் கீழ் ஆக்கபூர்வமான முதலீடுகள் செய்து சில வேலைவாய்ப்புகளை உருவாக்கலாம். ஆனால், ஆளும் பாஜக ஒருபோதும் இதைச் செய்யாது. ஏனெனில் அதை ஆட்சிக்கட்டிலில் அமர்த்திய அதன் எஜமானர்களான ஆளும் ஏகபோகங்களின் கட்டளை அதுவல்ல. மாறாக, வேலை வாய்ப்பு ஏற்படுத்துதல் முற்றிலும் தனியார் பொறுப்பில் விடப்பட்டுவிட்டது. ஆகவேதான் மத்திய பட்ஜெட் இந்த யதார்த்த நிலையையும் உண்மையையும்

தொடர்ச்சி 9ம் பக்கம்

## மத்திய பட்ஜெட் 2018–19

# தற்காலிக வேலை சிலவற்றை உருவாக்குவதை வேலையின்மைக்கான தீர்வாக முன்வைக்கின்றனர்

8ம் பக்கத் தொடர்ச்சி

மறைத்து “வேலை வாய்ப்புகள் உருவாக்குதல் மற்றும் வேலைகள் உருவாவதற்கு உகந்த சூழல் உருவாக்குதல் ஆகியவையே கொள்கை வகுப்பதின் உட்கருவாக இருக்கின்றன; இந்நடவடிக்கைகளின் பலன்கள் ஏற்கனவே தெரியத் துவங்கியிருக்கின்றன” என்று வெற்றுச்சொற்களைக் கொண்டு மக்களை ஏமாற்றுகிறது.

முதலாளித்துவ சார்பு நடவடிக்கைகளெல்லாம் வேலை வாய்ப்பு உருவாக்கும் முயற்சிகளாக எவ்வாறு நயவஞ்சகமாக காட்டப்படுகிறது என்பதையும் பார்க்கலாம். தேர்ந்தெடுக்கப்பட்ட துறைகளில் ரூ25000க்கும் குறைவான சம்பளத்திற்கு புதிதாக வேலைக்கு எடுக்கப்படும் ஊழியர்களுக்கான படிகள் வழங்கும் செலவினங்களுக்கு **50%** வரி விலக்கு அளிக்கப்படும் என்று ஏற்கனவே அரசு அறிவித்திருந்தது. இந்த சலுகை **240** நாட்கள் வேலைக்கு அமர்த்தப்படும் தொழிலாளர்களுக்கான படிகள் என்று இருந்த விதியை மாற்றி **150** நாட்களுக்கு வேலைக்கு அமர்த்தும் தொழிலாளர்களுக்கான படிகளுக்கு **50** சதவிகித வரி விலக்கு இந்த பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சலுகை தோல் பதனிடல் மற்றும் காலணி தொழில்களுக்கும் தற்போது நீட்டிக்கப்பட்டுள்ளது. இச்சலுகையால் அதிக எண்ணிக்கையில் வேலைக்கு ஆள் எடுப்பதற்கு தொழிலதிபர்கள் ஊக்குவிக்கப்படுவர் என நிதியமைச்சர் வாதிடுகிறார். என்ன ஒரு கயமைத்தனம்! லாபப்பசியால் உந்தப்பட்டு தொழில் தர்மம், நேர்மை ஆகியவற்றை என்றோ காற்றில் பறக்க விட்டுவிட்ட தொழிலதிபர்கள் இருக்கின்ற வேலையாட்களையே **150** நாட்களுக்குப் பிறகு வேலையிலிருந்து நீக்கிவிட்டு மீண்டும் புதிதாக வேலையில் சேர்த்ததாக கணக்கு காட்டி இந்த வரிச்சலுகையைப் பயன்படுத்தி தங்கள் லாபத்தைப் பெருக்கிக்கொள்வார்களேயன்றி புதிதாக வேலைக்கு ஆளெடுக்க மாட்டார்கள் என்பது அனைவரும் அறிந்த பரமரகசியம். அது மட்டுமின்றி, முதலாளித்துவ பொருளாதாரத்தின் உள்ளமைந்த விதியின் காரணமாக தவிர்க்கமுடியாமல் உருவாகின்ற சந்தை சுருக்கத்தால் உற்பத்தியாகும் பொருட்கள் விற்காமல் தேங்கிக் கிடக்கையில், உடல் உழைப்பிற்கு பதிலாக புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்தி இயந்திரமயமாகிக் கொண்டிருக்கின்ற வேளையில் வெறுமனே வரிச்சலுகை பெறுவதற்காக புதிதாக ஆள் எடுத்திருப்பதாக ஆலை உரிமையாளர்கள் காட்டுவார்கள். பெண் தொழிலாளர்களின் வருங்கால வைப்பு நிதிக்கணக்கில் வேலையில் சேர்ந்த முதல் மூன்று ஆண்டுகளில் பெண் ஊழியர்களுக்கான பங்காக செலுத்தவேண்டிய தொகையை **12%**த்திலிருந்து **8%**மாக குறைப்பதாக நிதியமைச்சர் பட்ஜெட்டில் தெரிவித்துள்ளார். இதனால் முறைசார் தொழில்களில் பெண்களை வேலைக்கமர்த்துவது அதிகரிக்கும் என்றும் அவர் வாதிடுகிறார். ஆனால், கடந்த சில ஆண்டுகளாக பணிபுரியும் பெண்களின் எண்ணிக்கை அதிவேகமாக குறைந்துள்ளதாக **2017–18**ம் ஆண்டுக்கான பொருளாதார சர்வே கூறுகிறது. உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டிற்காக அதிகமான நிதி ஒதுக்கப்பட்டுள்ளதால் அதிக எண்ணிக்கையில் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும் என்றும் வழக்கமான பாணியில் அறிவிப்புகள் செய்யப்படுகின்றன. ஆனால், என்னமாதிரியான வேலைகள் உருவாக்கப்படும்? நிரந்தரமான ஆதாயமிக்க வேலைகள் உருவாக்கப்படுமா? அல்லது மனித வாழ்நிலைக்கும் கீழான வாழ்நிலையையே கைக்கொள்ள முடிகின்ற நிரந்தரமற்ற தற்காலிக ஒப்பந்தப்பணிகளாக உள்ள வேலைகள் உருவாக்கப்படுமா? இதுபோன்ற அறிவிப்புகள் உண்மையில் வேலைவாய்ப்புகளை உருவாக்கும் முயற்சிகளா அல்லது பட்டினியில் வாடும் ஏழைகளை ஏமாற்றும் செயலா? தவிர, உட்கட்டமைப்பு வசதி மேம்படுத்தும் பணிகள் எல்லாவற்றிலும் உடல் உழைப்பிற்குப் பதிலாக எந்திரங்களைப் பயன்படுத்துதல் மேன்மேலும் அதிகரித்து வருகிறது. இதனால் கிடைக்கின்ற சொற்ப தற்காலிக வேலைகள்கூட கணிசமாக மறைந்துவருகிறது.

**2015–16**ம் ஆண்டுக்கான பட்ஜெட் தாக்கல் செய்யும்போது கிராமப்புற இளைஞர்களின் வேலைக்குத் தகுதியாகும் திறனை அதிகரிப்பதற்காக ஒரு புதிய திட்டத்தை கொண்டுவருவதாகவும் இதற்காக வெறுமனே ரூ**1500** கோடி ஒதுக்குவதாகவும் நிதியமைச்சர் அறிவித்தார். ஆனால், அதன் பிறகு அவர் தாக்கல் செய்த **3** பட்ஜெட்டுகள் எதிலும் அது என்ன திட்டம், அதன் விவரம் என்ன என்று எதையும் கூறவில்லை.

கடந்த ஜனவரி **22**ம் தேதி பிரதமர் தொலைக்காட்சி சேனல் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் “ஓராண்டில் மட்டும் **18** முதல் **25** வயதிற்கு உட்பட்ட இளைஞர்களுக்கான வருங்கால வைப்பு நிதி கணக்குகள் துவக்கப்பட்டுள்ளன. புதிய வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டிருப்பதை இது உறுதி செய்யவில்லையா?” என கேள்வி எழுப்பியுள்ளார். முதற்கண், வருங்கால வைப்பு நிதி கணக்குத் தரவுகள் பொதுவெளியில் இல்லை. எனவே, பிரதமருடைய கூற்றின் மெய்த்தன்மையை உறுதிசெய்ய இயலாது. இந்த விவரங்களை அரசாங்கம் பொது வெளியில் பகிரட்டும். அதன்பிறகு எத்தனை வேலைகள் உருவாக்கப்பட்டன என்று மக்களே உறுதி செய்துகொள்ளட்டும். உண்மையில் இதற்கு மாறாக, ஜவுளி, வங்கிகள், தகவல் தொழில்நுட்பம், ஸ்டார்ட்–அப் எனப்படும் புதுவகைத் தொழில்கள் என அனைத்து தொழில்துறையிலும் ஏராளமான வேலை இழப்புகளே காணப்படுவதாக பெரும்பாலான சர்வே அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இவை எல்லாவற்றிற்கும் மேலாக, பணமதிப்பு நீக்க நடவடிக்கையாலும் அதைத் தொடர்ந்து அமல்படுத்தப்பட்ட ஜிஎஸ்டி வரிவிதிப்பாலும் பெருவாரியாக வேலை இழப்புகள் ஏற்பட்டுள்ளன. ஆனாலும் இவற்றை எதிர்கொள்வதற்கான நடவடிக்கைகள் பற்றி நிதியமைச்சர் எதுவும் கூற முற்படவில்லை. “இவ்வாண்டில் புதிதாக 70 லட்சம் முறைசார் வேலைகள் உருவாக்கப்படும்” என்று தனது பட்ஜெட் உரையில் வெறும் அறிவிப்பு மட்டும் நிதியமைச்சர் வழங்குகிறார். எப்படி, எங்கே இந்த வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படப்போகின்றன என்ற விவரம் ஏதும் காணோம். மாறாக, மேன்மேலும் அதிக அளவில் ஒப்பந்த அடிப்படையிலான வேலைகள், தற்காலிக வேலைகள் உருவாக்குவதற்கே பாதை போடப்பட்டுள்ளது.

### வரி விதிப்பும்–சிறு–குறு–நடுத்தர தொழில்களும்

தனிப்பட்ட முதலீட்டாளர்களுக்கு எந்த வரிச்சலுகையும் நிதியமைச்சர் வழங்கவில்லை. ஆனால், ரூ**250** கோடி வரையில் வர்த்தகம் செய்கின்ற எம்எஸ்எம்இ எனப்படும் சிறு, குறு, நடுத்தர தொழில்களுக்கான வரி **30%**லிருந்து **25%** ஆக குறைப்பதாக அறிவித்தார். மேம்போக்காக பார்த்தால் பணமதிப்பு நீக்க நடவடிக்கையாலும் ஜிஎஸ்டி வரிகளாலும் மிகவும் பாதிப்பற்கு ஆளான எம்எஸ்எம்இ தொழில் முனைவோரின் கோபத்தைத் தணிப்பதற்காக அரசாங்கம் மேற்கொண்ட முயற்சிபோல இது தெரியும். ஆனால், வெளித்தோற்றத்தில் புலப்படுகின்ற அளவிற்கு இது ஒன்றும் அவ்வளவு எளிதான இலகுவான விஷயமல்ல. உண்மையில், ரூ**50** கோடி வரையில் வர்த்தகம் செய்கின்ற சிறு குறு தொழில்களுக்கான வரி அதிகரிக்கப்பட்டுள்ளது. இதுவரையில் அவர்கள் செலுத்திவந்த **28.84%** வரிக்கு பதிலாக இனி அவர்கள் **29.12%** வரி செலுத்தவேண்டும். ரூ**50** முதல் ரூ**250** கோடி வரை வர்த்தகம் செய்யும் நடுத்தர தொழில் முனைவோருக்கான வரி **34.61%**லிருந்து **29.12%**ஆக குறைக்கப்பட்டுள்ளது. அதாவது, சிறு, குறு, நடுத்தர தொழில்கள் அனைத்திற்கும் ஒரே அளவாக **29.12%** வரி விதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதனால் பெரும் அளவிற்கு முதலீடு செய்து வர்த்தகம் செய்கின்ற பெரிய கம்பெனிகள் தங்களது நிறுவனங்களை சிறு சிறு நிறுவனங்களாக துண்டித்து, ஒரு ஹோல்டிங் கம்பெனி மூலமாக இச்சிறு கம்பெனிகளை கட்டுப்படுத்தி அதன் மூலம் குறைவாக வரி செலுத்தி அதிக லாபம் ஈட்டுவதற்கு முயலக்கூடும்.

இரண்டாவதாக, பொருட்களின் இறுதி விலை மீது கூடுதல் சுமையாக நாட்டு மக்கள் அனைவரிடமிருந்தும் வசூலிக்கப்படும் மறைமுக வரியானது ஜிஎஸ்டி அமல்படுத்தப்பட்ட பிறகு அதிகரித்துள்ளது. உள்ளீட்டு வரவுப் பொறியமைவு (INPUT CREDIT MACHANISM) மூலமாக மறைமுக வரிகளின் அடுக்குத்தொடர் (CASCADING EFFECT) தாக்கத்தை ஜிஎஸ்டி குறைக்கும் என்றும் இதனால் நுகர்வோர் செலுத்துகின்ற இறுதியான மறைமுக வரி குறையும் என்றும் சொல்லப்பட்டது. ஆனால், **2018–19**ம் ஆண்டு பட்ஜெட் இதுபோன்ற தாக்கம் எதையும் காட்டவில்லை. **2016–17**ம் ஆண்டில் **11.2%**ஆக இருந்த மொத்த உள்நாட்டு உற்பத்தி | வரி நிகழ்வு **2017–18**ம் ஆண்டில் **11.4%**ஆகவும் **2018–19**ஆம் ஆண்டில் **12.1%**மாகவும் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. உள்ளீட்டு வரியின் பலன்களை (INPUT TAX BENEFITS) உண்மையில் நுகர்வோருக்கு அளிக்காமல் உற்பத்தியாளர்களே அனுபவிக்கிறார்கள். தவிர, வெறும் **3** சேவைகளுக்கு மட்டுமே வசூலிக்கப்பட்டுவந்த சேவை வரி கடந்த சில ஆண்டுகளில் ஒரு சில சேவைகள் நீங்கலாக ஏனைய அனைத்து சேவைகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. இதனால் நடுத்தர ஏழை மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆனால் அரசாங்கம் இதைப்பற்றியெல்லாம் சிறிதும் கவலைப்படவில்லை. மாறாக, வரி வசூல் அதிகரித்திருக்கிறது என்று பெருமைபட்டுக் கொள்கிறது. யாரிடமிருந்து வசூலிக்கப்படும் வரிகள் இவை? சாமானிய ஏழை நடுத்தர மக்களிடமிருந்துதான் வசூலிக்கப்படுகிறதே அன்றி, பெரும் தொழிலதிபர்கள், பன்னாட்டு நிறுவனங்கள், கார்ப்பொரேட்டுகள், தொழில் வர்த்தக ஜாம்பவான்கள் ஆகியோருக்கு வரிச்சலுகைகளும், வரி விடுமுறைகளும் மானியங்களும் இலவச சேவைகளும் அள்ளி அள்ளிக் கொடுக்கப்பட்ட பிறகும்கூட எஞ்சியுள்ள (அவர்களைப் பொருத்தவரையில்) சொற்ப வரிகளைக்கூட கட்டாமல் நாட்டை விட்டே ஓடுவதையும் அதற்கு இந்த அரசாங்கங்கள் துணைபோவதையும் நாட்டு மக்கள் கவனித்துக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

பட்ஜெட் உரையில் மற்றொரு குளறுபடியும் செய்யப்பட்டுள்ளது. **2016–17**ம் ஆண்டுக்கான நேரடி வரி வசூல் **12.6%** அதிகரித்ததாகவும் **2017–18**ம் நிதியாண்டில் ஜனவரி **15**ம் தேதிவரை நேரடி வரி வசூல் **18.7%**ஆக இருப்பதாகவும் பட்ஜெட் உரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. **2017–18**ம் ஆண்டுக்கான தொகை தற்காலிக கணக்கீடாகும். ஏனெனில் நிதியாண்டு பட்ஜெட் தாக்கல் செய்யப்படும்போது நிதியாண்டு முடிவுறவில்லை. வரி வசூல் செய்த தொகையிலிருந்து கூடுதலாக கட்டப்பட்ட வரி தொகை திருப்பி அளிக்கப்பட்டால் அது மொத்தம் வசூலிக்கப்பட்ட தொகையிலிருந்து கழிக்கப்பட்டு மொத்த வரிவசூல் குறைவாகப்போய்விடும். ஆதலால், வரிவசூல் தொகையை ஆரோக்கியமாகக் காட்டிட, திருப்பித்தரும் தொகையை பட்ஜெட் தேதி வரையில் நிறுத்திவைத்திடுமாறு வரிவசூல் செய்யும் அதிகாரிகளுக்கு அரசாங்கம் உத்தரவிட்டிருந்ததாக ஊடகங்களிலும் செய்தி வெளியானது. இதனால், வசூலிக்கப்பட்ட வரித்தொகை அதிகமாகத் தெரிந்து ஆரோக்கியமான தோற்றத்தை பொய்யாக ஏற்படுத்த முடியும் என்பதால் ஒவ்வொரு ஆண்டும் இவ்வாறு அரசாங்கம் கள்ளத்தனம் செய்வதாகத் தெரிகிறது. ஆனால், **2012–13** மற்றும் **2013–14** பட்ஜெட்டை ஒப்பிடுகையில் வருவாய் அதிகரிப்பு விகிதம் **12.6** சதவீதமாகவே இருந்தது.

பணமதிப்பு நீக்க நடவடிக்கையால் வரி செலுத்துவோரின் எண்ணிக்கை எகிறும் என்றும் மேலும் பலர் வரி வலைக்குள் இழுக்கப்படுவர் என்றும் பிரதமர் பேசிய ஜம்பப்பேச்சுகள் பொய்த்துப் போயின. இதில், நிதியமைச்சர் சொல்லாமல் விட்ட செய்தி என்னவெனில், பாஜக அரசாங்கத்தின் முதலிரண்டு ஆண்டுகளில் நேரடி வரி வசூல் உயர்வு உண்மையில் சுருங்கி ஏறக்குறைய **7** முதல் **8%**மாக மட்டுமே இருந்தது. **2017–18**ம் ஆண்டில் அளிக்கப்பட்ட கார்ப்பொரேட் வரி விலக்குகள், சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் செயல்படாமல் போனது, சிறப்பு பொருளாதார மண்டலங்களில் நிறுவப்பட்ட நிறுவனங்களுக்கான ஏற்றுமதி வரி விலக்குகள், மின்சாரம் தயாரிப்பு, கடத்துதல், பகிர்மானம் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களின் லாபத்தை வரி வருவாயில் சேர்க்காமல் விலக்களித்தமை, கனிம எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு உற்பத்தியில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களின் லாபத்திற்கு வரி விலக்கு அளித்தமை, வசூலிக்காமல் விட்ட நேர்முக வரி ஆகியவற்றின் காரணமாக ஏற்பட்ட வருவாய் இழப்பை கணக்கிற்கொண்டால் வரி இழப்பு ரூ**9,38,827** லட்சம் கோடி

தொடர்ச்சி 10ம் பக்கம்

## மத்திய பட்ஜெட் 2018–19

# இராணுவ தளவாட உற்பத்தியிலும் இரயில்வேயிலும் தனியார்மயம் அதிகரிப்பு

9ம் பக்கத் தொடர்ச்சி

களாக இருக்கும். இதனை நாங்கள் ஏற்கனவே 2017–18ம் ஆண்டுக்கான பட்ஜெட் ஆய்வுக்கட்டு ரையில் சென்ற ஆண்டே தெரிவித்திருந்தோம். இவ்வாண்டிற்கும் இதுபோன்று கணக்கிட்டால் வரி இழப்புத் தொகை இன்னும் அதிகமாக இருக்கும். அரசாங்கம் நடத்தியுள்ள இந்த மோசடிக்கு அதற்கு யார் சம்மன் அனுப்பி எந்தக் கூண்டில் ஏற்றுவது? உடனடியாக மரண தண்டனைதான் நிறைவேற்ற வேண்டும். இந்த உண்மையை மூடி மறைப்பதற் காகத்தான் தகிடுதத்தங்கள் செய்து புள்ளியியல் விவரங்களை திரித்துக்கூறுவது, விவரங்களை வெளியிடாமல் அமுக்குவது போன்ற தில்லுமுல்லு நடவடிக்கைகளில் அரசாங்கம் ஈடுபடுகிறது.

### எரிபொருள் விலை நிர்ணயம்

மற்றொரு விஷயத்தையும் வாசகர்களின் கவனத் திற்கு கொண்டுவரவேண்டிய கடமை எங்களுக் குள்ளது. எரிபொருள்களுக்கான விலைக்கட்டுப் பாட்டை அரசாங்கம் நீக்கியபோது அதன் உள்நாட்டு விலை சர்வதேச கச்சா எண்ணெய் விலைகளோடு இணைக்கப்படும் என்றும் சர்வதேச சந்தையில் விலை ஏற்ற இறக்கத்திற்கு ஏற்ப உள்நாட்டு சந்தை யில் எரிபொருள் விலை ஏறவோ இறங்கவோ செய்யும் என்றும் கூறியது. ஆனால், சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெயின் விலை பேரல் ஒன்றுக்கு 30 டாலரைவிட குறைந்தபோதிலும் அதன் பலன்கள் நுகர்வோராகிய நமக்கு கிடைக்கவில்லை. ஏனெனில், இந்த விலை வீழ்ச்சியின் பலன்களை மத்திய அரசாங்கம் அறுவடை செய்துவிட்டது. அதாவது கடந்த மூன்றாண்டுகளில் டீசலுக்கான மத்திய கலால் வரியை 380% உயர்த்தியது. பெட் ரோலுக்கான கலால் வரியை 120% உயர்த்தியது. சர்வதேச சந்தையில் விலை குறைந்ததால் கிடைக்கும் பலன்கள் மக்களை சென்றடைவதிலிருந்து தடுத்தது. இதன் காரணமாக பாஜக அரசாங்கத்தின் மீது பரவலாக கடுமையான விமர்சனங்கள் எழுந்தன. மக்களின் கோபமும் நீறு பூத்த நெருப்பாக கனன்று கொண்டிருக்கிறது. இதையெல்லாம் உணர்ந்த மத்திய அரசாங்கம் பெட்ரோல் டீசல் மீதான கலால் வரியை இரண்டு ரூபாய் குறைத்தது. எரிபொருட்கள் மீதான கூடுதல் கலால் வரியையும் ஆறு ரூபாய் குறைத்தது. ஆனால், அதே கையோடு இந்த வரி இழப்பை சமாளிப்பதற்கு செஸ் வரியாக எட்டு ரூபாய் விதித்துள்ளது. என்னவொரு நயவஞ்சகத் தனம் பாருங்கள்!

பிரதமர் மற்றொரு "சாதனை" பற்றியும் அடிக்கடி பேசுகிறார். அதாவது 5 கோடி ஏழை குடும்பங் களுக்கு இலவசமாக சமையல் எரிவாயு இணைப்பு கொடுத்திருக்கிறார்களாம். ஆனால் அவர் சொல்லா மல் விட்ட விஷயம் என்னவென்றால், அன்றாடம் அதிகரித்துக்கொண்டிருக்கும் சமையல் எரிவாயு சிலிண்டர் விலை அதிகரித்துக்கொண்டிருக்கையில் அவை இந்தக் குடும்பங்களுக்கு இலவசமாக வழங்கப்படுவதில்லை என்ற விவரத்தை ஆகும். நாளொன்றுக்கு ரூ20 கூட வருமானம் ஈட்டாத மக்கள் 77% பேர் இருக்கும் இந்தியா போன்றதொரு நாட்டில் இவ்வளவு அதிக விலை கொடுத்து சமையல் எரிவாயு சிலிண்டர் வாங்குவது சாத்திய மான ஒன்றா? சமையல் எரிவாயு இணைப்பு வழங்கப் பட்டுள்ளதை சாக்காக வைத்து மண்ணெண்ணெய்க் கான மானியம் ஏறக்குறைய பாதியாக ரூ4555 கோடியாக குறைக்கப்பட்டுவிட்டது. அதே போல், ரேஷன் கடைகளுக்கு வழங்கப்படும் மண்ணெண் ணெய் ஒதுக்கீடும் கடுமையாகக் குறைக்கப் பட்டுள்ளது.

### ஆக்கபூர்வமற்ற இராணுவ பட்ஜெட்

நிரந்தரமான ஆதாயமளிக்கும் வேலை வாய்ப்பு களை உருவாக்குவதற்கும் பொருளாதாரத்தை புனரமைத்து ஏற்றம் பெறச் செய்வதற்கும் கேந்திர துறைகளில் ஆக்கபூர்வமான முதலீடு செய்ய வேண்டும் என்ற மக்களின் நியாயமான கோரிக் கையை கண்டுகொள்ளாத அரசாங்கம், ஆக்கபூர்வ மற்ற பாதுகாப்பு துறைக்கு செய்யும் நிதி ஒதுக்கீடு விண்ணைத்தாண்டி செல்வது தொடர்கிறது. கடந்த ஆண்டை விட இவ்வாண்டுக்கான நிதி ஒதுக்கீடு மொத்த பட்ஜெட்டோடு ஒப்பிடுகையில் 7.81% அதிகரிக்கப்பட்டுள்ளது. அதாவது இவ்வாண்டுக் கான பாதுகாப்புத் துறை பட்ஜெட் ரூ2,95,511 கோடியாகும். மொத்த மத்திய செலவினத்தில் இது 12.10% என்ற அளவிற்கு இது மிக அதிகமாக உள்ளது. அப்படியிருந்தும்கூட இந்த நிதி ஒதுக்கீட்டை மேலும் அதிகரிக்கவேண்டும் என்று கூச்சல் எழுகிறது. நாட்டின் சாமானிய மக்கள் பட்டினியில் மடிந்து, மனித வாழ்நிலைக்கும் தாழ்வான வாழ் நிலையில் வாழ்ந்துகொண்டு சற்றேனும் நிவாரணம் தாருங்கள் என்று கெஞ்சி கூத்தாடிக்கொண்டிருக் கையில் நாசகரமான ஆயுதங்களை உற்பத்தி செய் வதற்காக வரி வருவாயின் பெரும்பகுதி செலவிடப் படுகிறது. இது என்ன நியாயம்? அரசாங்கத்தின் கொள்கையாகிய ஆயுத தளவாட உற்பத்தியில் அந்நிய ஏகபோக நிறுவனங்கள் உட்பட தனியார் துறையை ஈடுபடுத்துவதை அதிகரிப்பது என்ற கொள்கையை தனது பட்ஜெட் உரையில் எதிரொலித்த நிதி யமைச்சர் "தனியார் துறைகளையும் பொதுத்துறை களையும் மட்டுமின்றி சிறு குறு நடுத்தர தொழில் முனைவோரைக்கூட உள்நாட்டு இராணுவ தளவாட உற்பத்தியில் ஈடுபடுத்துவதற்காக தொழில்துறை யோடு நேசம் பாராட்டும் பாதுகாப்பு தளவாட உற்பத்தி கொள்கை ஒன்றை அரசாங்கம் கொண்டு வரவிருக்கிறது" என்று அறிவித்தார். இதன் பொருள் யாதெனில், மிக முக்கியமான பாதுகாப்பு துறையை அந்நிய முதலீட்டிற்கு திறந்துவிடுவது மட்டுமின்றி ஆயுதங்கள், இராணுவ உபகரணங்கள் ஆயுத உற்பத்திக்கான மூலப்பொருட்களாகி எஃகு உள்ளிட்டவைகளை கொள்முதல் செய்தல் ஆகிய வற்றுக்கான ஆர்டர்களை இந்த தனியார் நிறுவனங் களுக்கு வழங்கி மக்களை கசக்கிப்பிழிந்து வசூலித்த வரிப்பணத்தில் இத்தனியார் நிறுவனங்கள் கொழுத்த லாபமீட்டுவதற்கு அனுமதிக்கும் என்பதே யாகும். இராணுவ தளவாடங்கள் மற்றும் ஆயுதங் கள் கொள்முதல் செய்வதில் மெகா ஊழல்கள் நடக்கின்றன என்பதையும் நாம் இங்கே நினைவு கூறவேண்டும். ஊழலில் ஊறிப்போன இடைத் தரகர்கள், உயர்மட்ட இராணுவ அதிகாரிகள், அமைச்சர்கள், ஆளுங்கட்சித் தலைவர்கள் ஆகியோர் இந்த ஊழலில் ஈடுபடும் செய்திகள் அவ்வப்போது வெளிவருகின்றன. போஃபர்ஸ் பீரங்கி ஊழல், மரணமடைந்த போர் வீரர்களுக்கான சவப்பெட்டி ஊழல், ரபேல் போர் விமான ஊழல் ஆகியன வெல்லாம் மக்களாகிய நீங்கள் ஏற்கனவே அறிந்ததுதான். இன்னும் எத்தனை ஊழல்கள் வெளிவராமல் புதைந்து கிடக்கின்றனவோ!

மட்கி மடிந்துகொண்டிருக்கும் முதலாளித் துவத்தின் இன்றைய அந்திமக்கட்டத்தில் பொருளா தாரத்தை இராணுவமயப்படுத்துவது முதலாளித் துவ–ஏகாதிபத்திய நாடுகளின் பொதுவான பண்புக்கூறு ஆகிவிட்டது. சில அடிப்படையான தொழில்களின் உற்பத்திப் பொருட்களுக்கான டிமாண்டை செயற்கையாக தூண்டிவிடுவதற்காக இவ்வாறு இராணுவமய பொருளாதாரத்தைக் கடைபிடிக்கின்றன. தற்போது மக்கள் வரிப் பணத்தை தனியார் இராணுவ தளவாட உற்பத்தி யாளர்களிடம் கொண்டுபோய்ச் சேர்ப்பதற்கான வழியாகவும் இது அமைந்துவிட்டது. இராணுவத் திற்காக இவ்வளவு எக்கச்சக்கமான தொகையை செலவிடுவதை நியாயப்படுத்துவதற்காக ஏகாதி பத்திய–முதலாளித்துவ தலைவர்களும் அவர்களின் சேவகர்களான அரசாங்கங்களும் அரசியல் கட்சி களும் போர் மனநிலையையும் தேசபக்தி என்ற பெயரில் தேச வெறித்தனத்தையும் சமூகத்தில் ஏற்படுத்தி அம்மனநிலை நீடித்து இருக்குமாறு பார்த்துக்கொள்கிறார்கள். இந்தியாவிலும் ஆளும் ஏகபோக முதலாளிகளும் அவர்களின் சேவகர் களான ஆளுங்கட்சிகளின் உதவியோடு இதே கொள்கையையே நடைமுறைப்படுத்தி கோடானு கோடி மக்களின் பசி, பட்டினி, நிர்க்கதியான நிலையால் கொழுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

### ரயில்வேக்கான நிதி ஒதுக்கீட்டைக் குறைத்து தனியார்மயத்தை ஊக்குவிக்கிறது

இந்தியாவில் பயணம் மற்றும் போக்குவரத்தின் பிரதான இரத்த நாளமாக ரயில்வே சேவை விளங்கு கிறது. அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் மிகப் பெரிய நிர்வாகத்தைக் கொண்டு கணிசமான எண்ணிக்கையில் வேலை வாய்ப்புகள் வழங்கி பிரதானமாக மக்கள் நலனை அடிப்படையாகக் கொண்டு இத்துறை செயல்படுகிறது. இப்படிப் பட்ட பிரம்மாண்டமான துறைக்கான பட்ஜெட் 20116–17ம் ஆண்டு வரை தனியாக தாக்கல் செய்யப் பட்டுவந்தது. ரயில்களை இயக்குவது தொடர்பான சில விவரங்கள், இரயில்வே எதிர்கொள்ளும் பிரச்சினைகளும் சவால்களும் அவற்றை தீர்ப்பதற்கு மேற்கொள்ளவிருக்கின்ற நடவடிக்கைகள் போன்ற விவரங்களை பாராளுமன்றம் முன்பு அரசாங்கம் முன்வைத்து வந்தது. பயணிகள் கட்டணத்தையும் சரக்குக் கட்டணத்தையும் திருத்துவதற்கும் உயர்த்து வதற்கும்கூட பாராளுமன்றத்தின் ஒப்புதல் தேவை யாக இருந்தது.

ஆனால், கடந்த ஆண்டு முதல் ரயில்வே பட்ஜெட் பொது பட்ஜெட்டோடு இணைக்கப் பட்டு ஒன்றாக தாக்கல் செய்யத் துவங்கியது முதற்கொண்டு அரசாங்கம் தன்னை இந்தக் கடப்பாடிலிருந்து விடுவித்துக்கொண்டு விட்டது. இவ்வாறு இரண்டு பட்ஜெட்டையும் ஒன்றாக தாக்கல் செய்வதால் இதர வகை போக்கு வரத்துகளான சாலைப் போக்குவரத்து, நீர்வழித்தடங் கள், வான்வெளி போக்குவரத்து ஆகியவற்றுடன் இரயில்வேயையும் இணைத்து "உட்கட்டமைப்பு வசதி செலவினங்கள்" என்ற ஒரே தலைப்பின் கீழ் கையாளலாம் என்றும் இவ்வாறு செய்வதால் நிதி மற்றும் இதர ஆதாரங்களை சிறப்பாக மேலாண்மை செய்வதற்கு உதவிகரமாக இருக்கும் என்றும் நொண்டிச்சாக்கு சொல்லப்பட்டது. ஆனால், உண்மை அதுவல்ல. சாலைப் போக்குவரத்து, விமானப்போக்குவரத்து நீர்வழிப்போக்குவரத்து ஆகியவற்றில் தனியார்மயத்தை புகுத்தி அதிகரித்துக் கொண்டே வருவது போலவே இந்திய போக்கு வரத்தின் இரத்த நாளமாக விளங்குகின்ற ரயில் வேயையும் படிப்படியாக தனியார்மயமாக்குவது தான் அரசாங்கத்தின் இத்தகைய முடிவின் உண்மை யான நோக்கமாகும். ஒட்டுமொத்த பட்ஜெட் உரையில் வெறும் ஐந்து நிமிடங்கள் மட்டுமே ரயில்வேக்காக செலவிடப்பட்டது. ரயில்வே மேம்பாட்டு அதாரிட்டி என்ற தன்னிச்சையான ரயில்வே முறைப்படுத்தல் அமைப்பு ஒன்று கடந்த ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. கட்டணங்களை நிர்ணயிப்பதற்காகவும் மிக முக்கிய மாக, முதலீட்டு தேவைகளை மாற்றியமைப்பதற்கும் ஆலோசனைகள் வழங்குவதற்கும், தனியார் முதலீட்டுக்கான கொள்கைகளை வகுப்பதற்கும் இந்த அமைப்பு பணிக்கப்பட்டது. ஆர்டிஏ எனப்படும் இந்த இரயில்வே மேம்பாட்டு அதாரிட்டியானது பட்ஜெட்டை புறந்தள்ளிவிட்டு ரயில்வே கட்டணங் களை பலமுறை உயர்த்தியுள்ளது. ஆனால், மிக முக்கியமான பிரச்சினைகளான பயணிகளின் பாதுகாப்பை உண்மையிலேயே உறுதிப்படுத்துதல், பயணிகள் வசதி, காலந்தவறாமை ஆகியவற்றை சற்றுகூட கவனிக்கவில்லை.

மறுபுறத்தில், கடந்த ஆண்டில் ரயில்வேக்கு செய்யப்பட்ட ஒதுக்கீடாகிய ரூ55,000 கோடியி லிருந்து நடப்பு ஆண்டுக்கான பட்ஜெட் ரூ40,000 கோடியாக குறைக்கப்பட்டு விட்டது. 2018–19ம் ஆண்டுக்கான இந்திய ரயில்வேயின் மூலதனச் செலவினம் ரூ1,46,500 கோடியாக இருக்கும். இதில் வெறும் ரூ53,060 கோடி மட்டுமே அரசாங்கத்திட மிருந்து பட்ஜெட் ஒதுக்கீடாக கிடைக்கும். மீதமுள்ள தொகை ரயில்வேயின் உள்ளிருக்கும் ஆதாரங்களிலிருந்தும் பட்ஜெட்டிற்கு புறத்தேயுள்ள ஆதாரங்களிலிருந்தும் வரும் என்று சொல்லப் படுகிறது. ஆனால், இதற்கான விவரங்கள் எவையும் வழங்கப்படவில்லை. ரயில்வே ட்ராக்குகளின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்குவது, மீட்டர் கேஜ் பாதையை அகல ரயில்பாதையாக மாற்றுவது போன்றவை தொடர்பாக நிதியமைச்சர் பாராளு மன்றத்தில் தவறான அறிக்கைகளை வழங்கினார் என்றும் குற்றச்சாட்டு எழுந்தது. ரயில் வழித்தடங் களை புதுப்பித்தல் மற்றும் முறைப்படியான பாது காப்பு முறைமைகளை நிறுவுதல் பாதுகாப்பான பயணத்திற்கு மிகவும் அவசியமாகும் ஆனால், இத்தகைய உடனடி அக்கறை கொள்ளப்பட வேண்டிய பிரச்சினைகள் அப்பட்டமாக கவனிப் பாரற்று விடப்பட்டுள்ளன என்பது இரயில்வே துறைக்கு தொடர்ந்து குறைவாகவே நிதி ஒதுக்கு வதிலிருந்தும் கணிசமான எண்ணிக்கையில் காலியாக உள்ள பாதுகாப்பு பணியாளர்களுக்கான பணியிடங்கள் நிரப்புவதை தவிர்ப்பதிலிருந்தும் தெளிவாகத் தெரிகிறது.

தொடர்ச்சி 11ம் பக்கம்

## மத்திய பட்ஜெட் 2018–19

# வெற்று வாக்குறுதிகளை அள்ளித் தெளிக்கும் மக்கள் விரோத பட்ஜெட்

10ம் பக்கத் தொடர்ச்சி

தனியார்மயமாக்கும் செயற்போக்கு ஏற்கனவே முழு வீச்சில் நடந்துவருகிறது. தனியார் இரயில் இயக்குவோருக்கு "நியாயமான வாய்ப்புகளை" ஆர்டிஏ அனுமதிப்பதாக சொல்லப்படுகிறது. பயணிகள் மற்றும் சரக்கு இரயில்களை தனியார் இயக்குவதற்காக ரயில்பாதைகளை நிறுவுவதற்கான திட்டத்தை ரயில்வே அமைச்சகம் வகுத்துக் கொண்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்ட பிறகு அளித்த நேர்காணல் ஒன்றில் "இரயில்வே பாதுகாப்பு மற்றும் பயணிகள் வசதி பிரிவுகளில் நமக்கு மேன்மேலும் அதிக அளவில் தனியார் பங்கேற்பு தேவைப்படுகிறது" என்று இரயில்வே அமைச்சர் கூறினார். தனியார் கம்பெனிகளின் செய்தித் தொடர்பாளர்கள் என்ற 'பெருமைக்குரிய' பணியை அரசாங்கமும் அமைச்சர்களும் தாமாக ஏற்றுக்கொண்டுள்ளனர் என்பது இதிலிருந்து தெளிவாகிறது.

### வருவாய் மற்றும் நிதிப்பற்றாக்குறை

பட்ஜெட் தாக்கல் செய்யும் சமயத்தில் நிதி ஆதாரங்கள் பற்றிய நிலைமை ஒட்டுமொத்தத்தில் கடந்த காலங்களைவிட மிகவும் நிச்சயமற்றதாகவே இருந்தது என்பதை முதற்கண் சொல்லியாக வேண்டும். 2017, நவம்பர் மாதம் வரையான புள்ளி விவரங்கள் மட்டுமே இருக்கின்றன. இந்த நேரத்தில் பட்ஜெட் மதிப்பீட்டில் 53%த்திற்கு மட்டுமே வரி வருவாய் இருப்பதை இவை சுட்டிக்காட்டுகின்றன. இத்தனைக்கும் திரும்பச் செலுத்தவேண்டிய ஜிஎஸ்டி வரித்தொகைகள் ஏராளமாக பாக்கி இருக்கின்றன. 'இதர வருவாய்கள்' தலைப்பின் கீழ் மட்டுமே கடந்த ஆண்டைக்காட்டிலும் அதிக தொகை காணப்படுகிறது. பிரதானமாக பொதுத்துறை நிறுவனங்களிலிருந்து முதலீடுகளை திரும்பப்பெறுதல் இந்த இதர வருவாய்கள் தலைப்பின் கீழ் இருக்கிறது. கடந்த ஆண்டு இதர வருவாய் 42%மாக இருந்தது இவ்வாண்டு இது 72%மாக அதிகரித்துள்ளது. ஆனால் இந்த உண்மை விவரங்கள் பட்ஜெட்டில் வெளியிடப்படவில்லை. ஒருங்கிணைந்த ஜிஎஸ்டி வரியிலிருந்து வருகின்ற நிகர வரி வருவாய் விவரம் வருமாறு:

**2017ஆம் ஆண்டு**

மாதம் நிகர வரி வருவாய் (ஐஜிஎஸ்டியிலிருந்து)

| | |
|---|---|
| ஆகஸ்ட் | ரூ70,918 கோடி |
| செப்டம்பர் | ரூ30,395 கோடி |
| அக்டோபர் | ரூ18,370 கோடி |
| நவம்பர் | ரூ18,627 கோடி |

வரி வருவாய் எதிர்பார்க்கப்பட்ட தொகையை விட ரூ10,300 கோடி குறைவாகவே வந்தது. அதே சமயம், வருவாய் செலவினங்களோ 2017–18ம் ஆண்டு துவக்கத்தில் மதிப்பிடப்பட்டதைக் காட்டிலும் ரூ1,07,400 கோடிகள் அதிகமாக இருக்கிறது. பட்ஜெட் உரையில் சொல்லாமல் விட்ட விஷயம் என்னவென்றால், நடப்பு ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டைக் காட்டிலும் வருவாய் பற்றாக்குறை இரண்டு மடங்காக இருக்கும் என்ற உண்மையை ஆகும். அதாவது 2018–19ம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு ரூ1,30,000 லட்சம் கோடிகளாக இருக்கையில் வருவாய் பற்றாக்குறையோ ரூ2,50,000 லட்சம் கோடிகளாக இருக்கும் என்று மதிப்பிடப்படுகிறது.

நிதிப்பற்றாக்குறை வீழ்ச்சியானது ஜிடிபியில் 3.2%ற்குள் கட்டுப்படுத்தப்படவேண்டும் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால், 3.5% அளவிற்கு இது வீழ்ச்சியடைந்தது. இதற்குக் காரணம் 2017–18ம் ஆண்டுக்கான பட்ஜெட் ஒதுக்கீட்டில் மூலதனச் செலவினங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியைவிட 12% குறைவாக திருத்திய மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்டது. அதாவது, எதிர்கால பயன்பாட்டிற்கான செல்வங்களை உருவாக்குவதற்காக எவ்வளவு நிதி செலவிடுவதாக உறுதியளித்ததோ அதைவிட ரூ36,400 கோடி குறைவாக செலவிட்டுள்ளது. முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு இந்த அரசாங்கம் எதிர்காலத்தில் அதிகமாக முதலீடு செய்கிறது என்ற தொனியில் நிதியமைச்சர் பட்ஜெட் உரையில் பேசினாலும் புள்ளிவிவரங்கள் மாறுபட்ட கதையையே சொல்கின்றன. இதுபோன்ற முரண்பாடுகள், சுயதம்பட்டம், யதார்த்தத்திற்குப் புறம்பான இலக்குகள் நிர்ணயிப்பது, எதிர்காலத்தில் அடையப்போகின்ற சாதனைகளை அதீதமாக பெருக்கிக்காட்டுவது, பெரும்பொருளாதார குறியீடுகளை கணக்கிடுவதற்கான அடிப்படை ஆண்டை மாற்றுதல், இக்கணக்கீட்டு முறைமையை மாற்றுதல் என பல தில்லுமுல்லுகள் பட்ஜெட்டிலும் அரசாங்கத்தின் அறிவிப்புகளிலும் மலிந்து கிடக்கின்றன.

மிக முக்கியமாக, இந்தப் பற்றாக்குறைகளை எப்படி சமாளித்து எதிர்கொள்ளப்போகிறார்கள் என்று தெளிவாக எதுவும் குறிப்பிடவில்லை. மேலும் அதிகமாக கடன் வாங்கித்தான் இந்த பற்றாக்குறைகள் சமாளிக்கப்படப்போகிறதென்றால், இந்தக் கடனுக்கான வட்டியும் அசலும் கட்டுவதற்கான சுமைகள் மக்கள் மீது திணிக்கப்பட்டு மேலும் அவர்கள் முதுகு ஒடிக்கப்படும். நாட்டின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியுடனான கடனின் விகிதாசாரம் தற்போதே 74%மாக உள்ளது. புதிதான ரூபாய் நோட்டுகளை அச்சடித்து சமாளிக்கப் போகிறார்கள் என்றால் அதனால் பணவீக்கம் மேலும் அதிகமாகி விலைவாசி உயர்வு போன்ற இன்னபிற பிரச்சினைகளால் மக்கள் வாழ்வு மேலும் துயரமிகுந்ததாகும். செல்வந்தர்களுக்கும் ஆளும் முதலாளிகளுக்கும் ஏகபோகங்களுக்கும் அள்ளி அள்ளிக் கொடுக்கும் சலுகைகள் காரணமாக ஏற்படும் பட்ஜெட் பற்றாக்குறைகளை சமாளிப்பதற்காக மேலும் அதிக கடன்கள் வாங்கப்படுகின்றன என்றால், அக்கடன் சுமையை சாதாரண மக்கள் ஏன் ஏற்கவேண்டும்? சாராம்சத்தில், பட்ஜெட் என்ற பெயரில் மக்கள் மீது தொடுக்கப்படும் கொலைபாதக பொருளாதாரத் தாக்குதலின் உட்கரு இதுவேயாகும்.

### முற்றிலும் மக்கள் விரோத பட்ஜெட்

எனவே, பட்ஜெட்டை கூர்ந்து நோக்கி ஆய்வு செய்வோமானால் மக்களை வாட்டி வதைக்கும் பிரச்சினைகள் எதையும் தீர்ப்பதற்கான நடைமுறைகள் குறித்து நேர்மையான அக்கறையுடன் ஆராயப்படவில்லை என்று தெளிவாகிறது. மாறாக, உயிர்க்கொல்லி பொருளாதார நடவடிக்கைகளான பணமதிப்பு நீக்க நடவடிக்கைகள் ஆரவாரத்தோடு பாராட்டப்பட்டன. "நாங்கள் எடுத்த இந்த நடவடிக்கைகளின் வெற்றியால் உற்சாகமடைந்துள்ளோம். எதிர்காலத்திலும் இதுபோன்ற நடவடிக்கைகளை எடுப்பதென உறுதிபூணுகிறோம். கருப்புப் பணத்தை முடக்கி நேர்மையாக வரி செலுத்துவோர் பாராட்டப்பட்ட காரணத்தாலேயே நேர்மையான வரி செலுத்துவோர் இந்த பணமதிப்பு நீக்க நடவடிக்கையை "நேர்மையின் உற்சவம்" என பாராட்டினர்" என்று நிதியமைச்சர் பட்ஜெட் உரையில் குறிப்பிட்டார்.

நரேந்திர மோடி அரசாங்கத்தின் முந்தைய பட்ஜெட்டுகளைப் போலவே இவ்வாண்டு பட்ஜெட்டும் வெல்லப்பாகில் தோய்த்து எடுத்த எட்டிக்காயைப்போலவும் பொய் வாக்குறுதிகள் நிறைந்ததாகவும் கவர்ச்சிகரமானதாகவும் விளங்குகின்ற அப்பட்டமாக முதலாளித்துவ சார்பு கார்ப்பொரேட்டுகள் சார்பு பட்ஜெட்டாகும். சந்தேகத்திற்கிடமான விவசாய விரோத செயல்திட்டம் "விவசாயி சார்பு" என முன்னிறுத்தப்படுகிறது. வெறும் காப்பீட்டுத் திட்டம் மேம்படுத்தப்பட்ட மருத்துவ சேவையாக காட்டப்படுகிறது. வெறும் ஊகங்களும் தற்காலிக வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படுவதற்கான சாத்தியக்கூறுகளும் வேலைவாய்ப்பு பெருக்கம் என்று நம்பவைக்க முயற்சிக்கப்படுகிறது. இன்னும் இதுபோன்ற பல பொய்மைகள் இந்த பட்ஜெட்டிலும் நிறைந்துள்ளன. இந்தக் கொஞ்சல் பேச்சுகள் எல்லாம் மெய்யான பிரச்சினைகளிலிருந்து மக்கள் கவனத்தை திசை திருப்பி, மக்களுக்கு கொடுப்பதற்கு உருப்படியாக எதுவும் கொண்டிராத அரசாங்கம் மக்களுக்கு ஆதாயங்கள் நிறைந்திருப்பதாக ஒரு மாயையான தோற்றத்தை உருவாக்கி அவர்களை ஏமாற்றுவதற்காகவேயாகும். 2014 பொதுத் தேர்தலுக்கு முன்பு கொடுத்த வாக்குறுதிகள் வெறும் தகிடுதத்தங்களே என்பது ஆளும் பாஜகவின் தலைவரான அமித் ஷாவே தொலைக்காட்சி சேனல் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் சில ஆண்டுகள் முன்பு ஒப்புக்கொண்டுள்ளார் என்பதை நினைவு கூறத்தக்கும். இதை வைத்துப் பார்க்கையில், இந்த பட்ஜெட்டும் வெறும் தகிடுதத்தங்கள் நிறைந்ததாக மட்டுமின்றி, போலி தர்க்கங்களும் நல்லதனமான முகமூடி அணிந்ததாகவும் பொய்யுரைகளும் தவறான புள்ளிவிவரங்களும் காட்டுத்தனமான கனவுகள் நிறைந்ததாகவும் விளங்குகிறது. அதனால்தான் கார்ப்பொரேட் ஊடகங்களும் பெரும் தொழிலதிபர்களும் முதலாளித்துவ பொருளாதார–கட்டுரை எழுத்தாளர்களும், சலுகைகள் நிறைந்த அரசு உயரதிகாரிகளும் இந்த மக்கள் விரோத பட்ஜெட்டை கிறுக்குத்தனமாக பாராட்டி புகழ்கிறார்கள். தான் கூறும் பொய்யை எல்லோரும் நம்பிவிட்டார்கள் என்ற இறுமாப்பில் இருக்கின்ற ஆளும் பாஜகவை பாராளுமன்றத்தில் தோலுரித்துக்காட்டுவதற்கு எந்தவொரு எதிர்க்கட்சியும் இல்லை. அவை வலதுசாரியாயினும் சரி, இடதுசாரியாக இருந்தாலும் சரி, எல்லா எதிர்க்கட்சிகளும் உண்மைக்கு மரண அடி கொடுத்துள்ள இந்த பட்ஜெட்டை எந்தத் தடையுமின்றி நல்லவிதமாக நிறைவேற்றுவதற்கு எல்லா உதவியும் புரிந்தன. ஆனால் இந்த தகிடுதத்தங்களைக் கண்டு மக்கள் ஏமாறாதிருப்பார்களாக. தற்போது பெருங்கூச்சலோடு எழுப்பப்படுகின்ற கோஷமான 'சுக வாழ்வு' என்ற கோஷம், ஏற்கனவே எழுப்பப்பட்ட கோஷங்களான 'வறுமையை ஒழிப்போம்', 'விவசாயி வாழ்க' போன்ற கோஷங்களின் மறுவடிவமேயன்றி வேறல்ல என்பதை உணர்ந்திடுவோமாக! ■

## புதுச்சேரியில்



16.03.2018 அன்று நடைபாதை வியாபாரிகள் தொழில் சங்கத்தின் சித்தானந்தர் கோயில் கிளை துவக்கம். அச் சங்கத்தின் பெயர் பலகையை செயலாளர் தோழர் முத்து திறந்து வைத்தார். தோழர் அனவரதன், ஏஐயுடியுசி மாநிலத் தலைவர் உரையாற்றினார்

## பகத்சிங் நினைவு தினம் அனுஷ்டிப்பு

### அகில இந்திய ஜனநாயக இளைஞர் சங்கம்



புதுச்சேரியில் பகத்சிங் நினைவு தினக் கூட்டத்தில் தோழர் லெனின்துரை தயாரிப்புக் கமிட்டி செயலாளர், எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) உரையாற்றுகிறார்

**புதுச்சேரியில்** லாஸ்பேட்டை உழவர்சந்தை, சாமிப் பிள்ளை தோட்டம், சிவாஜி சந்தை, முத்தியால் பேட்டை மணிக்கூண்டு, நேரு வீதி, அரியாங்குப்பம் ஆகிய பகுதிகளில் பகத்சிங் நினைவு தினக் கூட்டங்கள் நடத்தப்பட்டன

Registered Newspaper
Posted at : Chennai Egmore RMS/1Patrika Channel
Posted on :
Publication : First week of Every Month

பாட்டாளி சிந்தனை

TN/CCN/429/2018-2020
TN/PMG (CCR)/WPP-373/2018-2020
Registered with the Registrar of Newspapers for India No : 62018/1988

# மார்ச் 23: தியாகி பகத்சிங் 87வது நினைவுதினம் அனுஷ்டிப்பு

அகில இந்திய ஜனநாயக இளைஞர் சங்கம் (AIDYO), அகில இந்திய ஜனநாயக மாணவர் சங்கம் (AIDSO), அகில இந்திய மகளிர் கலாச்சார சங்கம் (AIMSS) ஆகியவை இணைந்து தியாகி பகத்சிங் நினைவுதினத்தை பல்வேறு நிகழ்ச்சிகளாக பல இடங்களில் நடத்தின




சென்னை



மதுரை



தேனி




நெய்வேலி



ஈரோடு



மதுரை

# மார்ச் 15, 2018 அகில இந்திய கண்டன நாள்

## ஐஎன்டியுசி, ஏஐடியுசி, எச்எம்எஸ், சிஐடியு, எல்பிஎப், ஏஐசிசிடியு, ஏஐயுடியுசி ஆகிய மத்திய தொழிற்சங்கங்கள் அறைகூவல்

தொழிலாளர்கள், சாமானிய மக்கள் மீதான தாக்குதலை மத்திய அரசாங்கம் அதிகப்படுத்தி வருகிறது. நிரந்தரத் தொழிலாளர் முறையை அறவே ஒழிக்கும் வகையில் காண்ட்ராக்ட் தொழிலாளர் சட்டம் மாற்றப்படுகிறது. குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே வேலை உள்ளிட்ட முதலாளிகளுக்கு ஆதரவான திருத்தங்களை மத்திய அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது.

பொதுத்துறை தொழிற்சாலைகள் அனைத்தையும் தேச வரைபடத்திலிருந்து துடைத்தெறிய முயற்சி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. நிலக்கரிச் சுரங்கங்கள் தனியாருக்குத் தரப்படுகின்றன. இராணுவத்துக்கான கருவிகளைத் தயாரிக்கும் பாதுகாப்புத் தொழிற்சாலைகள் சீர்குலைக்கப்படுகின்றன. வங்கிகளின் வாராக் கடன்களை வசூலிப்பதை அரசாங்கம் கைவிட்டு, வங்கிகளையே தனியாருக்குக் கொடுக்க முயற்சிக்கிறது. கார்பொரேட் முதலாளிகளின் நிர்ப்பந்தத்துக்கு அடிபணிந்து தேசத்தின் நலன்களைப் காவு கொடுக்கும் முடிவுகளை மத்திய அரசாங்கம் எடுத்துவருகிறது.

இவையனைத்தையும் பிரதிபலிக்கும் வகையில் 2018–19ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டை தொழிலாளர், மக்கள் நலன்களுக்கு விரோதமாகத் தயாரித்துள்ளது. உயர்ந்த முத்தரப்பு அமைப்பான இந்தியத் தொழிலாளர் மாநாட்டை நடத்தாமல் மத்திய அரசாங்கம் தள்ளிப்போடுகிறது. பிராவிடண்ட் பண்டுக்கு கூடுதல் வட்டி கொடுக்க வழியிருந்தும் கொடுத்த வட்டியினையே அரசாங்கம் குறைத்து வருகிறது. இவற்றையெல்லாம் எதிர்த்து மத்திய தொழிற் சங்கங்கள் மார்ச் 15ம் நாளை கண்டன நாளாக அனுஷ்டிக்க அறைகூவல் விடுத்தன ■



சென்னை



தேனி




விருதுநகர்




கரூர்

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்), தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டிக்காக, அச்சிட்டு–வெளியிடுபவர்: ஆ ரெங்கசாமி அலுவலகம் : பு எண் 16 (ப எண் 18), இராட்லர் தெரு, சூளை, சென்னை 600 007 அச்சகம் : ஸ்ரீ அய்யனார் பிரிண்டர்ஸ், எண் 10, சுப்பாராவ் நகர், 2வது தெரு, சூளைமேடு, சென்னை 600 094, ஆசிரியர்: ஆ ரெங்கசாமி

Published by: A Rengasamy on behalf of Socialist Unity Centre of India (Communist), Tamilnadu State Organising Committee, from New No16 (Old No18), Rotler Street, Choolai, Chennai 600 007 and Printed at Sri Aiyanar Printers, No.10, Subha Rao Nagar, 2nd Street, Choolaimedu, Chennai 600 094. Editor : A Rengasamy
Tel : 044 - 2643 3169, 94445 51930 Email : suci_tn@yahoo.com Please visit our Website : **www.sucicommunist.org**